Registered as a News Paper

பக்கம் - 16

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி - 09 | 27-09-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 221

எண்பதுகளின் பின்னர்மீண்டும் சுன்னாகத்தில்
போட்டோ சனிகோ
கலர் லாப்
30 நிமிடத்தில் படம்
எமது கலையகத்தில் கறுப்பு வெள்ளை. கலர்ப் படங்கள்
உடனுக்குடனும் அனைத்து வைபவங்களுக்குமான படங்கள்
விழா மண்டபத்திலும் வழங்கப்படும்.
84. காங்கேசன்துறை வீதி. சுன்னாகம்.
204. கண்டி வீதி. வவுனியா.
(சி-7348)



# தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் தியாகி திலீபனுக்கு வீரவணக்கம்

(நமது நிருபர்)

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் விடுதலைப் புலிகளின் தளம் ஒன்றில் சிறப்பான ஏற்பாட்டுடன் நிகழ்ந்த தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு தீபம் ஏற்றி வணக்கம் செலுத்தினார்.

தியாகி லெப்.கேணல் திலீபனின் 15ஆவது ஆண்டு இறுதி நாள் நிகழ்வுகள் தமிழீழமெங்கும் மக்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. நேற்றுயாழ்ப்பாணம் வன்னி, மன்னார், மற்றும் தென் தமிழீழம் ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்நிகழ்வுகளின் போது காவடிகள்,ஊர்திகள்,திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்வலங்கள் என்பனவும் இடம்பெற்றன.

யாழ் மாவட்டம், வன்னிப் பிராந்தியம், தென் தமிழீழம் ஆகிய பகுதிகளில் இறுதி நாள் நிகழ்வாக உண்ணாவிரதங்களும் பொதுக்கூட்டங்களும் பிரதேச ரீதியாக நடைபெற்றன.

மற்றும் திலீபன் உயிர்நீர்த்த நேரமான காலை 10.48 மணிக்கு சகல ஆலயங்களிலும் பொது இடங்களிலும், மக்கள் உண்ணாவிரதம் இருந்த இடங்களிலும் மணி ஒலி எழுப்பப்பட்டது.

அதே நேரம் வீதியால் செல்லும் வாகனங்கள் சில மணித்துளி நேரம் தமது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டன. அடுத்து அந்த நேரம் உண்ணாவிரதம் இருந்த மக்கள் திலீபனின் உருவப் படத்திற்கு மலர்வணக்கம் செய்தனர்.

திலீபனின் இறுதி நாள் நினைவாக காலை 9.45 மணிக்கு தேசியக்கொடி ஏற்றலும் பொதுச்சுடர் ஏற்றலும் மலர்மாலை அணிவித்தலும் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து கவிதைகள், கட்டுரைகள், நினைவுரைகள், திலீபனின் உயிர்நீர்த்த படக்காட்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் போது, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள்,

(16 பக்கம் பார்க்க)

## உள்ளே..



இடைக்கால நிர்வாகத்திற்கு இடைக்கால ஏற்பாடு

பக்கம் - 03



அம்மா ...... உனக்காகக் காத்திருக்கிறேன்

பக்கம் - 14



உயிர்ப்பினை நோக்கிய பயணக்குறிப்புக்கள்

பக்கம் - 07

# மூத்த தளபதி கேணல் சங்கரிற்கு நினைவுத் தூபி திறந்து வைப்பு

மூத்ததளபதியும் தலைவரின் நண்பருமாகிய கேணல் சங்கர் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், கேணல் சங்கரின் நினைவுத்தூபி திறப்பு நிகழ்வும் நேற்று மாலை 4.00 மணிக்கு விடுதலைப் புலிகளின் தளம் ஒன்றில் நிகழ்ந்தது.


பொதுச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் ஏற்றிவைத்தார். பின்னர் தேசியக் கொடியினை புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் திரு.ச.பொட்டு ஏற்றி வைத்தார். தொடர்ந்து கேணல் சங்கரின் நினைவுத் தூபியை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திரை நீக்கம் செய்து வைத்தார்

கேணல் சங்கரின் நினைவுத் தூபிக்கு, கேணல் சங்கரின் துணைவியார் ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தினார்.அதனைத் தொடர்ந்து தளபதிகள், போராளிகள் மலர்வணக்கம் செலுத்தினர். அகவணக்கத்தைத் தொடர்ந்து நினைவு உரைகள் ஆரம்பமாயின.

கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் கேணல் சங்கர் நினைவுச் சிறப்பு உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து நினைவு உரைகளை திரு.யோகரத்தினம் யோகி, திரு.க.வே.பாலகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

கேணல் சொர்ணம் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

அதேவேளை மூத்த தளபதி கேணல் சங்கர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது. (யோ)



ஈழநாதம்
வெள்ளி நாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-09-2002

## எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலகட்டம்....

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஏழு மாதங்களுக்கு மேலாகி விட்டது.

இருதரப்பினருக்குமிடையிலான வரலாற்று முக்கியத்தும் மிக்க மூன்றாந்தரப்பு அனுசரணையுடனும் சர்வதேச ஆதரவுடனும் நேர்த்தியான திட்டமிடல்களுடனும் கூடிய பேச்சுவார்த்தைத் தொடரின் முதற்கட்டம் கூட தாய்லாந்தில் நம்பிக்கையை மேம்படுத்தும் வகையில், சகலரும் பாராட்டும் வகையில் நடந்து முடிந்துள்ளதுடன், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கான கால அட்டவணையும் அறிவிக்கப்பட்டு விட்டது.

சமாதானத்திற்கான முன்னெடுப்புகள் யாவும் நிதானமாக நகர்த்தப்பட வேண்டிய கடினமான பணியென்பதை ஒப்புக்கொண்டுள்ள அரசு உரிய இலக்கினை எத்தகைய இடர்கள், தடைகள் வந்தாலும் அடைந்தே தீருவதென திடசங்கற்பம் பூண்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் வெளிப்படையாகவும் கூறியுள்ளார்.

இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் போட தீவிரமாக இயற்கும் பயங்கரவாத அரசியல் மற்றும் பேரினவாத ஆதரவுச் சக்திகள் குறித்து அரசும் சர்வதேச சமாதான ஆதரவு சமூகமும் எச்சரிக்கையாகவும் கண்டிப்புடனும் இருக்க வேண்டுமென்பதேயாகும்.

இதுவே இன்றைய காலகட்டத்தின் மிக முக்கியமான தேவையுமாகும். இனப்பிரச்சினையை யுத்தமாக்கி அந்தப் போர்த் தீயில் குளிர் காய்ந்து கொண்டிருந்த அரசியல்வாதிகளுக்கும் போர் வெறியர்களுக்கும் சமாதானம் என்ற சொல்லே ஒவ்வாமைக்குரியது என்பது தெரியாத விடயமல்ல.

ஆனால் இந்த 'விஷ' வித்துக்கள் தொடர்ந்து பரப்பப்படுவதானது அமைதிக்கும், அரசியல் தீர்வுக்கும் ஆபத்தானதாகவே இருக்கும்.

இந்த தேசவிரோத- மனித விரோத சக்திகளுக்கு தலைமை தாங்குபவராக தன்னை இனங்காட்டி பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளின் ரட்சகராக அடையாளம் காட்ட முயலும் -அதிலும் அரசியல் லாபம் தேட முயலும் சந்திரிகாதான் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகார வலுவைக் கொண்ட சனாதிபதியாக இருக்கிறார் என்பதை உலக சமூகம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இவர்கள் எப்போது எப்படி இயங்குவார்கள் என்பதை எவராலும் கூறமுடியாது.

நாக்கு நுனிக்கண் நறுந்தோனும் நெஞ்சத்து
நீக்கரிய நஞ்சும் நிலைபெற்ற தீக்குணத்தோராகிய....

இவர்கள் தான் உண்மையில் பயங்கரவாதிகள். இவர்கள் உலக அமைதிக்கும் சமாதானத்திற்கும் எதிரானவர்கள். இவர்களின் ஆதரவுச் சக்திகள் எல்லா இடங்களிலும் எல்லா வடிவங்களிலும் நிலை கொண்டுள்ளார்கள். ஏதோ ஒரு வகையில் எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருப்பார்கள்.


"ஐநூறு பேரையாவது கொல்லாமல் சாகமாட்டேன்" எனக் கொலை வெறியுடன் சூளுரைக்கும் ஒரு சனாதிபதி சமாதானத்தை அங்கீகரிப்பார் என எவரும் நம்பினால் அது அவரின் அறியாமையையே வெளிப்படுத்தும். இதே சனாதிபதிக்கு அனுசரணையான இராணுவத்தளபதி அவரின் நம்பிக்கைக்குரியவரான கடற்படைத்தளபதி மற்றும் ஏனைய படைகளில் உள்ள உயர் அதிகாரிகள் சமாதானம் குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என எவராலுமே நம்ப முடியாது. இவர்களில் சிலருக்கான சேவைக்கால நீடிப்புகளை வழமைக்கு மாறாக வழங்கியதும் பல சந்தேகங்களை ஏற்படுத்தவே செய்கிறது.

இன்னமும் பல இடங்களில் இராணுவத்தினரும் கடற்படையினரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சமாதானத்தைக் குழப்ப எவரோ ஒருவரின் பலமான அனுசரணையுடன் செயற்படுத்தப்படுபவையாகவே உள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அரசின் கட்டுப்பாட்டில் இருந்தும் அவர்களால் இத்தகைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இயலாது இருக்கிறதென்றால், எங்கோ ஒரு பாரிய தவறு - ஆபத்து மிக்க தவறு இருக்கவே செய்கிறது.

நிச்சயமாக இந்தக் குழப்ப சக்திகளின் பின்னால் இயங்குபவர்கள் யாரென அனைவரும் தெரிந்து கொண்டே இருப்பர் என்பதில் ஐயமில்லை.

'ரணிலின் கழுத்தை பாய்ந்து கடிப்பேன்' என்ற வார்த்தைகளைச் சொன்னாலே போதும் ஆபத்தான சக்திகளை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.




-பரந்தன் கோரக்கன்கட்டு பகுதியில்-

## வெடிபொருளுடன் விளையாடிய இரண்டு சிறுவர்கள் பரிதாப மரணம்

(பரந்தன்)

பரந்தன் கோரக்கன்கட்டுப் பகுதியில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட வெடிபொருள் ஒன்று வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் பலியாகினர்.

நேற்றுமாலை 5.30 மணியளவில் நடைபெற்ற இத் துயரச்சம்பவத்தில் கோரக்கன் கட்டுப் பகுதியைச் சேர்ந்த மாடசாமி நாகேந்திரன் (வயது12) அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினார்.

காயமடைந்த மாடசாமி சசிகரன் (வயது08) என்பவர் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அங்கு மரணமானார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது பலியான சிறுவர்களின் தாயும், தந்தையும் வேலை நிமித்தம் வெளியே சென்றிருந்த வேளையில் இந்த இரண்டு சிறுவர்களும் வீட்டின் பின்புறப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்ததாகவும் அப்பொழுதே வெடிப்பொருளை கையிலெடுத்து கழற்ற முயன்றதாகவும் அவ்வேளை அது பெரும் சத்தத்துடன் வெடித்ததாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

வெடிபொருட்கள் தொடர்பான போதிய விழிப்புணர்வுகளை மேற்கொண்ட போதும் அவற்றை கவனத்தில் கொள்ளாததினால் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

அண்மையில் அடுப்புக்கு அணையாக எறிகணையை வைத்தபோது அது வெடித்ததினால் ஒரு சிறுமி பலியானதும் தெரிந்ததே.

-தாய்லாந்து பேச்சு மூலம்-

## கதிர்காமரின் ஏழாண்டுகால முயற்சி மூன்றே நாட்களில் சிதறடிப்பு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி யின் ஆட்சியில் கடந்த ஏழாண்டு காலமாக லக்ஸ்மன் கதிர்காமர் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் மூன்றே நாட்களில் சிதறடிக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணி யின் ஆட்சிக் காலத்தில் வெளி விவகார அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் பெருமளவு நிதிச் செலவில் விடுதலைப் புலிகளிற்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு பல்வேறு நாடுகள் புலிகள் மீது தடை விதிக்க காரணமாக இருந்தவர்.

ஆனால் தற்போது தாய் லாந்தில் அரசும் புலிகளும் மேற் கொண்ட பேச்சுவார்த்தையினை அடுத்து உலக நாடுகள் புலிகளைப் பாராட்டியிருப்பதோடு, தமது ஆதரவினையும் தெரிவித்துள்ளன.

அத்தோடு பல நாடுகள், தமது நாடுகளில் புலிகளிற்கு எதிராக போடப்பட்டிருக்கும் தடையினை நீக்கும் வகையிலான சமிக்ஞை களையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

இதனால் கடந்த ஏழாண்டு காலமாக சனாதிபதி சந்திரிகா தலைமையில் லக்ஸ்மன் கதிர்காமர் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முறியடிக்கப் பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## ஓமந்தை சோதனை நிலையம் நாளை காலை மூடியிருக்கும்

(கொழும்பு)

ஓமந்தை சோதனை நிலையம் நாளை சனிக்கிழமை காலை மூடப்பட்டிருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

இந்த சோதனை நிலையம் 9.30-பகல் 12.30 வரை மூடப் பட்டிருக்கும். பின்னர் பொது மக்களின் போக்குவரத்திற்காக மீண்டும் திறந்திருக்கும் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## மல்லாவியில் கடத்தப்பட்ட சிறுவன் கோண்டாவிலில் மீட்கப்பட்டார்

(நமது நிருபர்)

மல்லாவியில் வைத்துக் கடத்திச் செல்லபட்ட சிறுவன் ஒருவன் ஒரு வாரத்தில் கோண்டாவில் கிழக்கில் வைத்து மீட்கப்பட்டார்.

மல்லாவி மத்திய கல்லூரிப் பகுதியைச் சேர்ந்த சண்முகம் கந்தராசா (வயது 13) என்பவர் கடந்த 10ம் திகதி கடத்தப் பட்டுள்ளார். இதனையடுத்து அச்சிறுவனின் பெற்றோர் மல்லாவிப் பிரதேச பொறுப்பாளர் திலீப் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதால் அவர் அதனை காவல்துறையூடாக நடவடிக்கை எடுத்திருந்தார். அதனையடுத்து இச்சிறுவன் 18ம் திகதி கோண்டாவில் கிழக்கில் உள்ள ஒருவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டார். (யோ)

## கட்டடத் திறப்புவிழா

(நமது நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழகங்களுக்கான புகுமுகமாணவர் ஒன்றிய கட்டடம் எதிர்வரும் 30ஆம் திகதி திருநகர் வீதி (பழையசந்தை) யில் காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கான புகுமுக மாணவர் ஒன்றியத் தலைவர் இ.கோகிலரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கிளி.அரச அதிபர் தி. இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கிளி.வலய கல்விப் பணிப்பாளர் ப.அரிய ரத்தினம், வன்னி கல்விக்கழக பொறுப்பாளர் சு.ஞானம், கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர் க.பத்மநாதன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.இராணி மைந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (யோ)

# இடைக்கால நிர்வாகத்திற்கு ஒரு இடைக்கால ஏற்பாடு?




தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாக முன்பு அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கு போயிருந்தார். அங்கே அவரிடம் செய்தியாளர்கள் இடைக்கால நிர்வாகம் பற்றிக் கேட்டார்கள். அதற்கவர் ''சொற்பொறிக்குள் சிக்க வேண்டாம்'' என்று பதில் கூறினார்.

இடைக்கால நிர்வாக சபை என்ற சொல்லும் சிங்கள வெகு சனங்களுக்குப் பீதியூட்டும் ஒரு சொல்லாகி விட்டபடியால் தான் மொறகொட அப்படிக் கூற வேண்டியிருந்தது.

இதன்படி அரசாங்கம் ஒன்றில் இடைக்கால நிர்வாக சபை என்ற சொல்லைத் தவிர்த்துவிட்டு வேறொரு பெயரைப்பாவிக்கப் போகிறதா? அல்லது இடைக்கால நிர்வாக சபைக்குப் பதிலாக வேறொரு புதிய ஏற்பாட்டை உருவாக்கப்போகிறதா?

நடந்து முடிந்த முதற்சுற்றுப்




பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் இதைத்தான் காட்டுகின்றன. சமாதானத்துக்கான சில கூட்டுச் செயலணிகளை உருவாக்கப் போவதரக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உத்தேச இடைக்கால நிர்வாக சபைக்குரிய பொறுப்புக்களைச் சொரியலாக நிறைவேற்றும் ஒரு நடவடிக்கையே.

இப்படி சொற்பொறிக்குள் சிக்கிவிடாதிருக்கும் உத்திகள் ஒருபுறம்.

இன்னொருபுறம் கடந்தவாரம் தாய்லாந்தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியவை சொற்பொறுக்கிகளுக்கும் சொற்தொங்கிகளுக்கும் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடத்தயார் என்று அவர் கூறியது கொழும்பிலும் சர்வதேச அளவிலும் பெரிய பர்பரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கொழும்பில் உள்ள சொற்பொறுக்கிகளும் சொற்தொங்கிகளும் கலாநிதி பாலசிங்கத்தின் சொற்களில் தொங்கத்தொடங்கிவிட்டார்கள்.

ஆனால் காலநிதி பாலசிங்கம் மிகவும் சமயோசிதமாகவும் சூசகமாகவும் ஒன்றைக் கூறியுள்ளார். தமிழர்களின் தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை போன்றவற்றை ஒப்புக்கொள்ளும் ஒரு இறுதித்தீர்வே பிரிவினைக்கு ஈடானதாயிருக்கும் என்பதே அது.

கொழும்பில் உள்ள சொற்பொறிக்கிகளும் சொற்தொங்கிகளும் அவசரத்தில் இதைத் தவறவிட்டுவிட்டது போலத் தோன்றுகிறது. அல்லது வழமைபோல இது ஒரு தந்திரமான மௌனமாயிருக்கலாம்.

அதேசமயம் ஜே.வி.பி. முன்பு பாடமாக்கிய மார்க்சிசத்தில் சில விசயங்களையாவது இன்னும் மறந்துவிடவில்லை என்பது போலக் கருத்துக்கூறியுள்ளது.

கலாநிதி பாலசிங்கம் கூறிய தமிழர்தாயகம் சுயநிர்ணய உரிமை போன்றவற்றின் அடிப்படையில் பிரிந்துபோகும் உரிமை தமிழர்களுக்கு உண்டு என்பதால் புலிகள் பிரிவினைக்கோரிக்கையை வேறு வழிகளில் முன்வைக்கின்றனர் என்று ஜே.வி.பி. கூறுகிறது.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய மிகவும் குரூரமான யதார்த்தம் என்னவென்றால்- தமிழர்களின் உயிரும் நிலமும் வாழ்வும் உரிமைகளும் இப்படி சொற்பொறிக்குள் சிக்கிவிடக்கூடிய அல்லது சொற்பொறிக்கிகள்சொற் தொங்கிகளிடம் சிக்கிவிடக் கூடிய அற்ப விவகாரங்களாகத்தான் இன்னமும் இருக்கின்றன என்பதே.

ஒரு தீர்வைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே கதைத்தால் இருக்கின்ற சுமூகநிலையும் கெட்டுப்போய்விடும் என்பதாற்தான். தீர்வைப்பற்றிய உரையாடலை ஒத்திவைக்கவும் இடையில் ஒரு இடைக்கால நிர்வாகத்தைப் பற்றிச் சிந்திப்பது என்றும் முதலில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்பொழுது இடைக்கால நிர்வாக சபையும் கூட சிங்களவருக்குப் பீதியூட்டும் ஒன்றாகி விட்டதுபோலத் தோன்றுகின்றது என்பதால் இடைக்கால நிர்வாக சபையை உருவாக்குவதற்கு முன்னோடியாக மேலும் ஒரு இடைக்கால ஏற்பாடாக கூட்டுச் செயலணிகளை உருவாக்க முயல்வது போலத்தோன்றுகின்றது.

**நிலாந்தன்**

அதாவது இடைக்கால நிர்வாக சபைக்கு முன்பாக மேலும் ஒரு இடைக்கால ஏற்பாடு.

இக்கூட்டுச் செயலணிகள் அதிகாரப் பகிர்வுக்கான கருநிலைச் செயற்பாட்டுத்தளங்களாய் அமையும் வாய்ப்புக்கள் அதிகம் தெரிகின்றன.

அரச செயலக வட்டாரங்களிலிருந்து வரும் தகவல் ஒன்றின்படி வடக்கு கிழக்கில் முக்கிய முடிவுகளை எடுக்கும் உயர்மட்ட அரச அதிகாரிகளின் கூட்டங்கள் எல்லாவற்றிலும் புலிகளின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாயிருக்க வேண்டும் என்றும் இது பற்றிய விபரம் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் பதியப்பட்டிருக்க வேண்டும் என்றும்ஒரு அறிவுறுத்தல் சமாதானச் செயலகத்தின் இயக்குனர் வேணார்ட் குணதிலகவிடமிருந்து வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது நிர்வாக மட்டத்தில் முடிவுகளை எடுக்கும்போது புலிகளையும் பங்காளிகளாக்க அரசாங்கம் விரும்புவதையே காட்டுகிறது.

மெய்யான அர்த்தத்தில் கூறுவதாயிருந்தால் அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் தமிழ்ப் பகுதிகளில் புலிகள் அரசியல் வேலைகள் செய்ய அனுமதிக்கப்பட்ட போதே அதிகாரப் பகிர்வு அதன் கருநிலையில் தொடங்கிவிட்டது. இப்பொழுது இரண்டாம் கட்டம் வெளிநாட்டு நிதியைப்பெறுவது பிரயோகிப்பது போன்றவற்றில் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒருவித அதிகாரப்பகிர்வு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நிறுவனங்களின் மதிப்பீட்டின்படி யுத்தப் பிரதேசங்களில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளுக்குச் சுமார் 5000 லட்சம் அமெரிக்க டொலர்கள் தேவை.

மற்றது முழு அளவு இயல்புநிலையை உருவாக்குவதற்கான கூட்டுச் செயலணிகள் இவற்றின் வீச்செல்லை கண்ணி வெடிகளை அகற்றுவதிலிருந்து உயர்பாதுகாப்பு வலயங்களைப் பற்றிக் கதைப்பது வரை வரும். இது இராணுவ மயநீக்கத்திற்கான செயற்பாட்டுத்தளமாக இருக்கும். யுத்தநிறுத்தத்தின் அடுத்த கட்டம் ராணுவ அர்த்தத்தில் இதிலிருந்து பயன்பொருத்தமான விதத்தில் தொடங்கும்.

இப்படிக் கூட்டுச் செயலணிகளை உருவாக்குவதன் மூலம் இப்பத்தியில் கடந்தவாரம் கூறப்பட்ட்து போல புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் இடைக்கால நிர்வாகத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியை நிரப்ப முடியும் என்று நம்ப இடமுண்டு. அதேசமயம் இடைக்கால நிர்வாக சபைக்குள் அடங்கும் அம்சங்களைச் சொரியலாகவும் படிப்படியாகவும் சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் கவனத்தை அதிகம் ஈர்க்காதவிதத்திலும் அமுல்படுத்த முடியும் என்று அரசாங்கம் நம்புவது போலவும் தோன்றுகின்றது.

இது எதைக்காட்டுகிறது என்றால் இலங்கைத்தீவில் விஞ்ஞான பூர்வமாகச் செய்யப்படும் சமாதானம் வெளிப்படையானதாக நேரடியானதாக இருப்பதற்குரிய வாய்ப்புக்கள் குறைவு என்பதையே.

சமாதானத்தின் வழியில் காணப்படும் தத்துக்களையும், சோதனைகளையும் கடப்பதற்கு அதிகம் கற்பனையும் தந்திரங்களும் உத்திகளும் தேவைப்படுகின்றன என்பதையே

ஆனால் இது எதுவும் அரசாங்கம் ஒரு கட்டத்தில் சமாதானத்தை ஒரு தந்திரமாக அல்லது பொறியாகப் பாவிக்கக்கூடும் என்ற தமிழர்களின் இயல்பான அச்சத்தைப் பெருப்பிக்காமலும் இருக்கவேண்டும். ●

# படமும் தகவலும்

## செப்ரெம்பர் 11 தாக்குதல் நினைவாக



*நியூயோர்க்கைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியான ஜேம்ஸ் ஸ்மித் தனது இரண்டு வயது மகள் பட்ரீசியாவை அழைத்துக் கொண்டு பற்றறி பார்கி (அமெரிக்கா) விலுள்ள பொலிஸ் ஞாபகார்த்த சேமக் காலைக்குச் செல்கிறார். இவரது மனைவியும் பெண் பொலிஸ் உத்தியோகத்தருமான மோரியா ஸ்மித்- 11.09.2001 தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர். அந்தப்பெண் குழந்தை தனது தாயின் 'பொலிஸ்' பட்டியைத் தாங்கிய வண்ணம் அஞ்சலி செலுத்தச் சென்று கொண்டிருக்கிறாள்.*

## சதாம்ஹூசைனுக்கு மாணவர்கள் ஆதரவு




*சதாம்ஹுசைனின் படத்தை அச்சிட்ட தமது பாடப்புத்தகத்தை விரித்து பிடித்தபடி சதாமுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தும் ஈராக்கிய பாடசாலைச் சிறுமிகள் அமெரிக்கா-பிரிட்டன் இணைந்து மேற்கொள்வதாகக் கூறும் இராணுவ அச்சுறுத்தல்களுக்கு தாம் அஞ்சப் போவதில்லை என சதாம் அறிவித்துள்ளார்.*

## காஷ்மீரில் தேர்தல் பிரசாரம்



*காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் ஓமர் அப்துல்லா சிறிநகரில் நடந்த பேரணி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகிறார். ஜம்முக்காஷ்மீரின் வடபகுதியில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.*

## முற்றுகைக்குள் யாசீர் அரபாத்



*பாலஸ்தீனியத் தலைவர் தங்கியிருக்கும் மேற்குக்கரை நகரான 'ரம்ழா'வில் உள்ள சேதமுற்ற கட்டடத்தை மேலும் தாக்க இலக்கு வைத்து நிற்கும் ஸ்ரேலிய டாங்கி இந்தக் கட்டடத்தினுள் யாசீர்அரபாத் முற்றுகையிடப்பட்ட நிலையிலுள்ளார்.*

# நறுக்கென...



## அதிகரிக்கும் முறுகல்நிலை...

'சமாதானத்திற்கு தடையாகவும் இருக்கமாட்டேன். அதேபோல் சமாதானம் என்ற போர்வையில் பொய் கூறி ஆட்சியைத் தக்கவைக்கவும் விடமாட்டேன்...' இது சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரத்தொனியுடன் கூடிய கடந்த வாரத்து மிரட்டல் ஆகும்...

அதேவேளை சந்திரிகா அம்மையார் அண்மையில் ரணிலுக்கு எழுதிய கடிதமொன்றில், அவர் தலைமையிலான அரசின் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் நாட்டின் இறமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் புலிகள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாக குற்றம் சாட்டியும் உள்ளார்.

இதன் உள்நோக்கம் ஏற்கனவே தன்னிடமிருந்து கை நழுவிப்போன பாதுகாப்பு அமைச்சையோ, உள்துறை அமைச்சையோ மீண்டும் அதிகார வரையறைக்குள் கொண்டு வருவதற்கு தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவதேயாகும்.

ஜனாதிபதி இப்படி ஒரு திட்டத்துடன் இயங்க ரணில் தலைமையிலான அரசோ, ஒரு வருடத்தின் பின் பாராளுமன்றத்தை கலைக்கும் சந்திரிகாவின் அதிகாரங்கள் சிலவற்றை இல்லாமல் செய்வதற்கான 19வது திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதுடன் தற்போது ஜனாதிபதி தன்னிச்சையாக தனக்குச் சார்பாக செயற்படக்கூடிய இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி ஆகியோரது பதவிக் காலத்தை மேலும் நீடித்திருப்பதனை யடுத்து அவரது கையில் இருக்கும் இராணுவ அதிகாரத்தைப் பறிக்கும் சட்டமூலங்களை சமர்ப்பிப்பது குறித்தும் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

இதன்பிரகாரம் கூட்டு நடவடிக்கைத் தளபதியாக ஒருவரை பாதுகாப்பு அமைச்சின் கீழ் நியமித்து அவரின் கீழ் முப்படைகளும் செயற்படுவதற்கான ஒரு புதிய திட்டத்தையும் அமுல் செய்ய அரசு யோசித்து வருவதாகத் தெரிகிறது.

சமாதானப் பேச்சுக்களின் முதற்கட்ட வெற்றியும் அதன்பாற்பட்ட அரசின் திருப்தியும் அதற்கான சர்வதேச ஆதரவும் பாராட்டும் சிறிலங்காவின் இரட்டை ஆட்சியினருக்கிடையே பலத்த மோதல் ஏற்படுவதற்கான முறுகல் நிலையை மேலும் மோசமாக்கி வருவதாகவே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்...

பாவம் தென்பகுதி மக்கள்...

நமோ நமோ மாதா எனப்பாடுவதை விடவும் அவர்களால் வேறென்ன செய்யமுடியும்? ❑❑



## குழப்பவாதிகளின் செயற்பாடுகள்

மழை விட்டும் இன்னமும் தூவானம் நின்றபாடில்லை. போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு, விடுதலைப்புலிகள் மீதான தடையும் நீக்கப்பட்டு,

தாய்லாந்தில் அமைதித் தீர்வுக்கான முதலாம் கட்ட பேச்சுவார்த்தையும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் நாட்டின் சிலபகுதிகளில் இராணுவ கெடுபிடிகள் பொதுமக்கள் மீது- தமிழ்மக்கள் மீது இன்னமும் தனது கெடுபிடிகளை நிறுத்தியபாடில்லை.

கிழக்கு மாகாணம் வாகரைப் பிரதேசத்தில் உள்ள மாங்கேணிக் கிராமத்தில் படையினர் வீடுவீடாகச் சென்று சோதனைகளை நடத்தியுள்ளதுடன் வீட்டில் உள்ளவர்களின் விபரங்களையும் பெற்றுச் செல்வதாகவும் பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சில வாரங்களின் முன்னர் இதே கிராமத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நுழைந்து அங்குள்ள மக்களைப் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளனர். அப்போதும் கூட அவர்களின் விபரங்களை பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வீடுகளில் வெளியார் எவரும் வந்து தங்க அனுமதிக்கக் கூடாது எனவும் எச்சரித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளும் படையினரும் நேருக்குநேர் சந்தித்து உரையாடி தமது பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கும் அளவுக்கு ஒரு சமாதானச் சூழல் நிலவும் இந்தச் சமயத்தில் இராணுவத்தில் ஒரு சாரார் அப்பாவிப் பொதுமக்களை ஏன் இப்படி அச்சுறுத்துகின்றனர் என்பது தெரியாமல் அவர்கள் பீதியடைந்துள்ளனர்.

சமாதான நகர்வுகளுக்கும், ஐ.தே.முன்னணி அரசுக்கும் விரோதமான பாதுகாப்பு படையில் இருக்கும் சில சக்திகளும் யுத்தத்தின் மூலம் பெருமளவில் பணம் சேர்த்துக் கொண்ட அரசியல்வாதிகளும், ஆயுதவர்த்தகர்களும் பயன்படுத்தி இயல்பு நிலையைக் குழப்பி, தமது மறைமுகச் செயற்பாடுகள் மூலம் கிழக்கில் குறிப்பாக முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் கலவரங்களை ஏற்படுத்துவதன் மூலம் மீண்டும் ஒரு யுத்த சூழ்நிலையை உருவாக்க முயன்று வருகிறார்கள் என சில அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சாதாரண படையினர் இவ்வாறு தன்னிச்சையாகச் செயல்படமாட்டார்கள் என்றும் இவர்களின் இத்தகைய நடவடிக்கைகளின் பின்னணியில் சில இனவாத சக்திகளின் அனுசரணையாளர்களான அதிகாரிகளும் கூட மறைமுகமாக செயற்பட்டு வருகிறார்கள் எனவும் கூறும் இந்த அவதானிகள் இந்த குழப்பவாதிகளான அதிகாரிகளில் பல முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையினதும், சனாதிபதியினுடையதும் 'ஆசீர்வாதம்' பெற்றவர்கள் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆக சமாதான சூழலைக் குழப்பி, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கத் துடிக்கும் சக்திகள், பேரினவாத விசுவாசத்துடன் ஆங்காங்கே தீவிரமாக இயங்கி வருகின்றனர் என்பதை இத்தகைய சம்பவங்கள் உறுதி செய்கின்றன... ❑❑



## குற்றங்களும் குற்றவாளியும்

'நாம் ஆட்சியில் இருந்தபோது சில நிறுவனங்களை மட்டுமே தனியார் மயமாக்கினோம். இன்றைய ரணில் ஆட்சியோ நாட்டின் சகல உடமைகளையும் தனியார் மயமாக்க முயல்கிறது'- சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாதான் இப்படிக் கூறியிருக்கிறார்.

இவர் இப்படிக் கூறிக்கொண்டிருந்த வேளையில் வங்கிகளில் உள்ள பாதுகாப்பு பெட்டகங்களில் இருந்து சந்திரிகாவின் அருமை மாமனாரும், அவரின் இரண்டாவது மனைவியாரும் தங்களின் பெயர்களிலும், நிரந்தர வைப்பிலும் போட்டிருக்கும் சுமார் 43 மில்லியன் ரூபாய் பெறுமதியான கணக்கில் காட்டப்படாத வைப்புச் சான்றிதழ்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வெளிக்கொணர்ந்துள்ளனர்.

இதற்கு சந்திரிகா என்ன சொல்லப்போகிறார்.

இதுவும் ஒரு வகை உறவினர் தேசியச் சொத்தை தனியார் மயமாக்கும் நடவடிக்கைதானே...

அல்லது... இதனை உறவினர் மயமாக்கும் நடவடிக்கை என்று புதிய விளக்கம் கொடுக்கப் போகின்றாரா

கடந்த பொ.ஐ.முன்னணி அரசில் அமைச்சர்களாக இருந்த அனைவரதும் சொத்து விபரங்களையும் அவர்கள் மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை நியாயமான முறையில் காலதாமதமும் பக்கச்சார்பும் இன்றி ஆராய்ந்தால் தேசியச் சொத்துக்கள் மக்கள் வரிப்பணம் ஆகியவை எப்படி கட்சிமயமாக்கப்பட்டும் உறவினர் மயமாக்கப்பட்டும், உறுப்பினர் மயமாக்கப்பட்டும் திறைசேரி வெறுமையாகிப் போனதற்கான காரணம் முழுவதும் வெளிச்சத்திற்கு வரும்.

சந்திரிகாவுக்கு 49 ஆடம்பரக்கார்கள், கதிர்காமருக்கு 12 ஆடம்பரக்கார்கள்... என ஒவ்வொருவர்வசமும் சிக்கியுள்ள தேசிய உடமைகள் தனியார் மயமாக்கலின் வேறொரு வடிவமாகத் தெரியவில்லையா?

இந்த அரசில் எஸ்.பி.திஸநாயக்கா இருக்கும்வரை சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு எவ்வித கொடுப்பனவையும் வழங்கப் போவதில்லை... கடந்த காலத்தில் அவர் சமுர்த்தி அமைச்சராக இருந்த காலத்தில் கோடிக்கணக்கில் நிதி மோசடிகளைச் செய்தார் என்றும் அம்மையார் கூறியுள்ளார்.

கடந்த காலம் என்று அவரது ஆட்சிக்காலத்தைத்தானே குறிப்பிடுகிறார். அப்போது கோடிக்கணக்கில் திஸநாயக்கா மோசடி செய்த திறமையைப் பாராட்டித் தான் அவருக்கு கடைசிக் காலத்தில் உள்ளக நிதியமைச்சர் பதவியை வழங்கிக் கௌரவித்தாரா என்ற கேள்வியும் எழுவதை தடுக்க முடியாமல் உள்ளது. ❑❑



## ராஜபக்ஷ - ராஜதந்திரம்

எதிர்க்கட்சியில் இப்போது தன்னை எப்படியாவது ஸ்திரப்படுத்தி தனது அரசியல் எதிர்காலத்தை வலுப்படுத்த படாதபாடுபடுபவர் ஒருவர் உண்டென்றால் அவர் வேறு எவருமல்ல சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரான மகிந்த ராஜபக்ஷவேதான்.

பொதுசன ஐக்கிய முன்னணித் தலைவி சந்திரிகாவின் விருப்பமும் ஆதரவுமின்றி எப்படியோ அவர் எதிர்க்கட்சித் தலைவரானது ஒரு பெரும் ஆச்சரியம் என்றால் தனது கட்சிக்குள்ளேயே அதாவது எதிர்க்கட்சிக்குள்ளேயே தனக்கு எதிராகச் செயற்படும் ஒரு எதிர்க்கட்சியினரை சமாளிக்க அவர் படும்பாடு பரிதாபகரமான கூத்து என்றே கூறவேண்டும்.

அவரை எந்தநேரமும் தள்ளிவிட்டு எதிர்க்கட்சித் தலைவர் நாற்காலியில் ஏறி அமர்ந்து கொண்டு தான்தான் அடுத்த பொ. ஐ. முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் எனப் பிரகடனம் செய்யத் துடிக்கும் அநுராவை சமாளித்தாகவேண்டும்.

தம்பியை பதவிக்குக் கொண்டு வந்து பண்டா பரம்பரையை அரசியலில் ஸ்திரப்படுத்த முனையும் சந்திரிகாவின் தந்திரங்களை முறியடிக்க வேண்டும்.

அநுராவை எடுபிடியாக வைத்துக்கொண்டு பொ.ஐ.முன்னணியை குழப்பி, குழம்பிய அரசியல் குட்டையில் ஆதாயம் தேடமுயலும் நேரடி விரோதிகளான ஜே.வி.பி. யினரை அண்டவிடாது கவனிக்கவேண்டும்.

ரணிலின் அரசியல் விடயத்தில் சந்திரிகாவின் கடும் போக்கை முறியடித்து, அரசு கவிழாமல் பாதுகாத்தால் தான் இன்னொரு தேர்தலை முகங்கொள்வதிலிருந்து தம்பி சிறிதுகாலம் எதிர்க்கட்சி தலைவர் பதவியிலாவது இருக்கலாம் என்ற தனது கனவை பாதுகாக்க வேண்டும் சரிவை நோக்கிச் செல்லும் பொ.ஐ.முன்னணியை உடையாது காத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளர் நிலையை உறுதி செய்தல்வேண்டும்.

மகிந்த இதையெல்லாம் எப்படிச் செய்யப்போகிறார். எவ்வாறு சமாளிக்கப்போகிறார்.

ஏற்கனவே சிங்கள மக்களின் ரட்சகர் - பாதுகாவலர் என்று பௌத்த பீடங்கள் முடிசூடியுள்ள நிலையில் பேரினவாதிகளின் நம்பிக்கையை எவ்வாறு பாதுகாக்கப்போகிறார்?

ஆனாலும் ஆள் நிதானமாகத்தான் உள்ளார். தன்னை மீறி மங்களசமரவீர கதைத்தபோது 'வாயை மூடு' நான் தான் எதிர்க்கட்சித்தலைவர் எனக்கு எல்லாம்தெரியும் என அதிகாரப்பிரயோகம் செய்துள்ளார். ஜே.வி.பியுடன் அரசியல் பேரம் பேச நியமித்தபோது அதை நிராகரித்து தன்னைக் கட்சியிலிருந்து ஓரங்கட்ட சந்திரிகா போடும் சதியில் இதுவும் ஒன்றென அதை புறக்கணித்துள்ளார்.


நாற்காலியை- எதிர்க்கட்சித்தலைவர் பதவியை அவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா போன்று கைவிடுவார் எனத்தெரியவில்லை.

ஆகா அநுராவுக்கு ராஜபக்ஷ வில்லனா?

'ராஜபக்ஷவுக்கு அநுரா வில்லனா?

ஆனால் இருவருமே கதாநாயகர்களல்ல என்பது மட்டும் உறுதி. பொ.ஐ.முன்னணியில் கதாநாயகி ஆட்சிதானே நிலவுகிறது.

❑❑



## மிதவடி மயிலர்

செய்தி:- சமாதானத்திற்கு எதிராகச் செயற்படும் படையினர் பதவி நீக்கம் செய்யப்படுவர் என ரணில் எச்சரிக்கை.......

மயிலர்:- நல்ல விஷயம்தான்... ஆனால் அவர்களை சமாதானத்திற்கெதிராக தூண்டிவிடும் சக்திகளையும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளையும் என்ன செய்யப்போகிறாராம் ரணில்... இதுதான் நான் கேட்கும் கேள்வி பாருங்கோ... பாவங்கள்... சம்பளத்திற்காக சண்டை பிடிக்க வந்த அந்த சாமானியர்களை கோவிச்சு என்ன நன்மை பாருங்கோ... எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன் பாருங்கோ...

செய்தி:- பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற நாட்களில் 100 கோடி ரூபா இலங்கைக்கு உதவி கிடைத்தது.

மயிலர்:- சண்டையின் போது செலவுக் கணக்கை மட்டும் எழுதியவை சமாதானத்திலை வரவுக் கணக்கை எழுதுகினம்... அதுசரி இந்த நிதி வடக்கு கிழக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கும் மீள் குடியேற்றம் மற்றும் நிவாரணப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் என சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன... இங்கைதான் சிறிலங்கா அரசின் நேர்மையே தங்கியிருக்கப் போகுது... நிவாரணத்திற்கான ஒதுக்கீட்டில் முக்கால்வாசி நிர்வாகச் செலவுக்கு கணக்கு காட்டும் கடந்த கால செயற்பாடுகளை கைவிட்டு கண்ணியமாக நடக்க வேண்டும் பாருங்கோ... கண் கெட்ட வேலை செய்தால் தொடர்ந்து கை நீட்டி வாழும் நிலைதான் ஏற்படும் பாருங்கோ...

செய்தி:- பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கான சமிக்ஞைகள் தெரிகின்றன என்கிறார் அஸ்கிரிய பீடாதிபதி...

மயிலர்:- தனிச்சிங்கள ஆட்சி ஏற்பட பௌத்தர்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் ஒரு பீடாதிபதி சிலநாட்களுக்கு முன்னர் சொன்னது நினைவுக்கு வருகிறது பாருங்கோ... மத பீடங்கள் சரியா இருந்திருந்தால் அரச பீடங்கள் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியிருக்காது பாருங்கோ... அது சரி இது மகிழ்ச்சியுடன் சொன்ன வார்த்தைகளா அல்லது... பேரினவாதிகளை எச்சரிக்கும் வார்த்தைகளா என்று குழப்பமாக இருக்குது... சமாதான முயற்சிக்கு மக்கள் பூரண ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்பதை அஸ்கிரிய பீடாதிபதி ஒப்புக் கொண்டுள்ளதை பாராட்டத்தான் வேண்டும் பௌத்த தர்மம் யுத்ததர்மத்தை போதிக்கக் கூடாது என்பதை புரிஞ்சு கொண்டால் சரி...

செய்தி:- இலங்கையில் சமாதானம் ஏற்பட பலமான அத்திவாரம் இடப்பட்டுள்ளது என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ..

மயிலர்:- அமைச்சர் அண்ணாச்சி இதை ஆருக்குச் சொல்லுகிறார், மக்களுக்கா தனது கட்சிக்காரர்களுக்கா... சமாதான நகர்வுகளுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்ளும் பொ.ஐ.முன்னணி- ஜே.வி.பி கூட்டணிக்குத்தான் என்றால் சந்தோஷம்... ஆனால் ராஜபக்ஷவின் பேச்சு ஜனாதிபதியான அவரது கட்சித் தலைவிக்கு நிச்சயம் எரிச்சலூட்டுவதாகத்தான் இருக்கும் பாருங்கோ... நாட்டிற்கு சமாதானம் ஏற்படும் நேரம் அவரது கட்சிக்குள் சண்டை தீவிரமடைந்திருக்கு. அந்த ஆதங்கத்தில் தான் இதனை அவர் சொல்லியிருப்பாரோ...! ♦

## பிரமுக அறிமுகம்



### சிறிலங்காவின் சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ருக்மன் சேனநாயக்க

சிறிலங்காவின் மிகப் பிரபலமான மனிதர்களின் இரத்த உறவுக்கு உரித்தான இந்த மனிதர் அதிகம் பிரபலமில்லாத பிரபலஸ்தர்.

பாட்டன் பெருமை,பெரியப்பன் பெருமை, என்று நிறைய வரலாற்றுப் பெருமைகளின் விலாசம் இவருக்குரியது. ஆனால்இவரது சுயவிலாசப் பெருமை குறிப்பிடத்தக்க அளவில் பாரம்பரிய பெருமையைக் காப்பாற்றும் அளவுக்குவளர இனிமேல்தான் சாதிக்க வேண்டும். ஏறு நெற்றியும் முக்கால் வழுக்கையும் கொண்ட இந்த பிரபல மீசைக்காரரின் பேரனுக்கு மீசை கிடையாது.

கிழவன் சேனநாயக்க என்று ஒரு காலத்தில் இலங்கையர்களால் வர்ணிக்கப்பட்ட அந்த அடர்மீசைக்காரரான டீ.எஸ் சேனநாயக்காவின் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரின் - பேரன்தான் இந்த ருக்மன் சேனநாயக்க.

அதுமட்டுமல்ல... மற்றொரு பிரமச்சார பிரதமர் டட்லிசேனநாயக்க இவரது பெரிய தந்தைதான்.

இவரது தந்தை ரேயர்ட் சேனநாயக்க அரசியலுக்கு வராதவர். பெரும் வர்த்தகர். ருக்மனும் ஒரு காலத்தில் வர்த்தகத் துறையில் இருந்தவர்தான்.

சேனநாயக்க பாரம்பரிய அரசியலுக்கு இப்போதுள்ள ஒரே வாரிசு.

வெற்றிகரமான- தாத்தா மற்றும் பெரியதந்தையைப் போன்ற அரசியல்வாதியென்றோ தந்தையைப் போன்ற வர்த்தகப் பிரமுகர் என்றோ இவரை மிகைப்படுத்திக் கூறிவிட முடியாது.

'டெஷகனம' தெய்வம் என சிங்களவர்களால் சிலாகித்துக் கூறப்படும் டட்லிசேனநாயக்கவின் குணாம்சம் ஓரளவிற்கு இவரிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது ஆனால் கிழவன் சேனநாயக்காவின் கில்லாடித்தனம் இவரிடம் இல்லை.

டட்லி இறந்த பின்பு டெடிகம மக்கள் அவர் மீது வைத்திருந்த மதிப்பையும் அனுதாபத்தையும் பயன்படுத்தி -ஐ.தே கட்சியில்அத்தொகுதியில் போட்டியிட்டு 1973ல் முதல் முதல் பாராளுமன்றத்தினுள் காலடி எடுத்துவைத்து அரசியல் பிரவேசம் செய்தார்.

ஆனால் அப்போதைய ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் சேனநாயக்க குடும்பத்தை அதிகம்மதிக்காதவரும், குள்ளநரி அரசியல்வாதியுமான ஜே.ஆர் ஜெயவர்த்தனா , ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இவரை கட்சிய்யவிட்டு வெளியேற்றினார்.

1977வரை இவர் பாராளுமன்றில் பின்வரிசை உறுப்பினராக இருந்தார். பரபரப்பற்ற பயந்த அரசியல்வாதியாக ஜே.ஆரால் அச்சுறுத்தப்பட்ட ஒருவராக இவரது அரசியல் வாழ்வின் முதற்கட்டம் அமைந்தது.

அரசியலூடான தெளிவற்ற இவரது நிலை இவரைப்பின்னர் எந்தத் தேர்தலிலும் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்கவைத்தது.

அந்த இடைக்காலத்தில் மீண்டும் இவர் தந்தையின் வர்த்தகத்துறையுடன் தன்னைப் பிணைத்துக்கொண்டு அதில் நிறைவேற்று இயக்குநராக இருந்தார்: அரசியல் மீண்டும் அவரை இழுக்க ஐக்கிய லங்கா மக்கள் கட்சி (ELJP) என்ற கட்சியை ஆரம்பித்தார். கலாநிதி காமினி விஜயசேகரா அதில் இவருடன் இணைந்துகொண்டார். இந்த இரண்டாவது அரசியல் பிரவேசமும் அவருக்கு வெற்றியை அளிக்கவில்லை.

பிறேமதாசவின் ஆட்சிக்காலம் இவருக்கு சாதகமாக அமைந்தது. அவர் ஆட்சியில் அவருக்கு மிகவும்நெருக்கமான முக்கியஸ்தராக விளங்கினார். ஜே.ஆர் ஆரையெல்லாம் அகற்றினாரோ அவர்களையெல்லாம் பிறேமதாச அரவணைத்த காலம் அது.


எல்லாவற்றையும் விட 1989இன் ஜே.வி.பி பயங்கரவாத காலகட்டம். , ELJP கட்சிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அக்காலகட்டத்தில் இவரது வீடு ஜே.வி.பியினரின் சந்திப்பு மையமாக விளங்கியது. பல முக்கிய ஜே.வி.பி தலைவர்கள் அங்கு வந்து தங்கிச் செல்வதும் உண்டு. பிறேமதாசவுடனும்- ஜே.வி.பி தலைவர்களுடனும் ஒரே சமயத்தில் உறவு வைத்திருந்தவர் இவர்.

1990 யூலை ELJP யை கலைத்துவிட்டு மீண்டும் ஐ.தே. கட்சியில் இணைந்த இவர் ரணிலின் ஆட்சியில் அமைச்சராகியுள்ளார். ஆனாலும் பரபரப்பில்லாத அரசியலில் தன்னைப் பாதுகாக்கும் தந்திரோபாயங்களை கடந்தகால அரசியல் இவருக்குக் கற்பித்ததாகவே தெரிகிறது......

## சந்திரிகா சந்திக்கும் தோல்விகளும் அவமானங்களும் குலைந்துபோகும் குறுகிய ராஜதந்திரங்கள்......!





தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையிலான முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தில் பலத்த எதிர்ப்புகளுக்கும் பலமான எதிர்பார்ப்புகளுக்குமிடையே வெற்றிகரமாக நடந்துமுடிந்துள்ளது. இப்பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் மற்றும் சாதனைகள் குறித்து இருதரப்பினரும் திருப்திகரமான அறிக்கைகளை விட்டதுடன் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைக்கான நாட்களை அறிவித்துள்ளமையும் சர்வதேச சமூகத்தின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளமையானது சிறிலங்காவின் சமாதான ஆதரவுச் சக்திகளுக்கு எதிர்காலம்குறித்த நம்பிக்கையினையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நம்பிக்கையே சமாதானத்திற்கும் அமைதிமுயற்சிகளுக்கும் எதிரான சந்திரிகா தலைமையிலான பொதுசனஐக்கிய முன்னணி - மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி) கூட்டணியினருக்கும் ஏனைய சிங்களபௌத்த பேரினவாதக் கொள்கைக்கும்பல்களுக்கும் தமது அரசியல் எதிர்காலம் குறித்த அவநம்பிக்கைக்கான அடித்தளமாகியுமுள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான நகர்வுகள் முனைப்புக் கொண்டுஇயங்க ஆரம்பித்ததிலிருந்து அதன் முன்னேற்றத்தைத் தடுக்க சந்திரிகா மேற்கொண்ட உத்திகளும் யுத்திகளும் எத்தனையோ.

பகிரங்கமாகவும், இரகசியமாகவும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்துமே ஐ.தே முன்னணி அரசின் முறியடிப்பு தந்திரோபாயங்களால் செயலிழந்துபோய்விட்ட நிலையில், நிறைவேற்று அதிகார வலுவைக் கொண்ட சந்திரிகாவின் அடாவடித்தன அரசியல் மெல்ல மெல்ல அஸ்தமனமாகிவருவதை, அவரின்அந்த அதிகார வலுவைப் பயன்படுத்தி எதனையும் செய்ய முடியாதுள்ள நிலையானது தெளிவாக்கியுள்ளது.

இதனை ஒட்டுமொத்தமாகவே பேரினவாதத்தின் வீழ்ச்சியென அறிக்கையிட முடியாவிட்டாலும் சந்திரிகா தலைமையிலான எதிர்க் கட்சியினரின்வீழ்ச்சி நிலைக்கான எச்சரிக்கை என உறுதியாகக் கூறமுடியும்.

கடந்த பொதுத்தேர்தலின் முன்னர் இருந்த சந்திரிகாவின் ஆட்சிஅதிகார பரப்பின் எல்லையற்ற தன்மைக்கும், அகங்காரத்திற்கும் தேர்தல் முடிவுகள் முற்றுப்புள்ளி என்று சொல்லமுடியாத ஒரு வரையறை யை ஏற்படுத்தவே செய்தது.

மக்கள் ஆதரவு நிலைமாற்றம் ரணிலுக்கே சாதகமான நிலைமையை உருவாக்கியளித்தமையானது சந்திரிகா தனது பலத்தையே பயன்படுத்த முடியாத பலவீனத்தை ஏற்படுத்தியதுடன் தொடர்ந்துவந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளோ அவரையும் அவரது சகாக்களையும் வாயடைக்க வைத்திருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் அந்தப் படுதோல்வியின் அதிர்ச்சியானது அவர்களை வாய் தடுமாறி வரம்புவகையின்றி உளறவும் வைத்துள்ளமையே சிறிலங்காவின் வெகுசனத் தொடர்பூடகங்களுக்கு இன்று வெறும் வாய்க்கு கிடைக்கும் அவலாகவும் மாறியுள்ளது.

சந்திரிகாவிடமிருந்து ஒவ்வொரு அமைச்சாகப் பறித்துக்கொண்ட ரணிலின் ராஜதந்திரம் அவரது நீண்ட காலக் காத்திருத்தலின் யுத்தியின்பாற்பட்ட ஒரு பொறிவியூகம் என்பதை முதலில் எவரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ரணில் தன்னைச் சுற்றிலும் சந்திரிகாவின் பலமும் பலவீனமும் நன்கு அறிந்தவர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், எஸ்.பி. திஸாநாயக்க போன்றோரை அமைச்சு அந்தஸ்தும் அதிகாரமும் வழங்கி அணிவகுத்து வைத்திருந்ததுடன் அரசியல் சட்ட அறிஞ்ஞர்களான K.N.சொக்ஸி, திலக் மாரப்பன போன்றோரை அமைச்சர்களாக அமர்த்தி அவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் ஆட்சியைச் செலுத்த முற்பட்டமையும் அவரது தீர்க்கமான மதிநுட்பத்துடன் கூடிய திட்டமிடும் திறனுக்கு எடுத்துக்காட்டாகும். இது சந்திரிகா எதிர்பார்க்காத ஒரு சுற்றிவளைப்பாகவும் இருந்தது.

" சமாதானத்துக்கான யுத்தம்" என்ற தந்திரச்சொல்லைப் பயன்படுத்தி தனது ஏழாண்டுகால 'அல்லி ராஜ்ஜியத்தை' அதிகார பூர்வமாகவும் அகங்காரத்துடனும் நடாத்திவந்த சந்திரிகாவின் அரசியல் ஆழுமையானது 'சமாதானத்துக்கான அரசியல்' என்ற மிகவும் சாதாரண மந்திரச் சொல்லைப் பயன்படுத்தி ரணில் முன்வைத்த அடிகளினால் மெல்ல மெல்ல ஆனால் அடித்தளத்தையே சிதையுமளவிற்கு விரைவான கால மாற்றம் ஒன்று நிகழும் என சந்திரிகா கனவிலும் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

மக்கள் சமாதானத்துக்கான யுத்தத்தை முற்றிலும் நிராகரித்தமையானது சந்திரிகாவின் அரசில் சாதுரியத்தின் பூச்சியத் தன்மையை உறுதிப்படுத்தியது. அரசியல் தொலைநோக்கற்ற, நிறைவேற்று அதிகார வலுவை மட்டுமே நம்பி மேற்கொள்ளப்படும் அணுகுமுறைகள் ஆபத்தானதும், அர்த்தமற்றதுமான எதிர்காலத்திற்கே இட்டுச் செல்லும் என்பதை உணரும் அளவுக்கு , ஆபத்தான அவரது தோழமைக்குரியவர்கள் அவரைச் சிந்திக்கவே விடவில்லை.

இந்தத் தோழமைகளையும் இழந்தால் தான் முற்றிலும் அரசியலில் தனிமைப் படுத்தப்பட்டுப் போகலாம் என்ற அச்சமும் அநுராவும் அவர்கள் பக்கம். நின்று ஆடும் ஆட்டமும். சந்திரிகாவை சமூக மற்றும் சமகால அரசியலில் யதார்த்தம் பற்றி சிந்திக்கவே விடவில்லை. சந்திரிகாவின் தற்போதைய சரிவு நிலை இதில்தான் மோசமாகத் தொடங்குகின்றது.

இந்தப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்வரைக்கும் அதற்கு எந்தெந்த வகையில் முட்டுக்கட்டை போடமுடியுமோ அந்தந்த வகையிலெல்லாம் போட்டார். ஆனாலும் அவற்றை சமாதானத் தரப்பினர்கள், ஏற்பாட்டாளர்கள், சர்வதேச சமூகம் என அனைவருமே புறந்தள்ள நிகாரித்துத்தள்ளியவிதம் சந்திரிகாவை மிக மோசமாக அலட்சியப்படுத்தியமைக்கு நிகராகும். இந்தவகையில் இதுவரை காலமும் சந்திரிகா குறித்து உலகம் கொண்டிருந்த அனுதாபரீதியிலானதும் சமாதானத்தேவதை என்ற உணர்வு ரீதியிலுமானதுமான பிரமைகள் உடைந்து நொருங்கவும் விடுதலைப் புலிகள் சந்திரிகா குறித்து ஏற்கனவே முன்வைத்த கருத்துக்கள் நியாயமானதாக உணர்ந்துகொள்ளவும் சந்திரிகாவின் சமாதான விரோத நிலைப்பாடும் முன்னுக்குப் பின் முரணான கருத்து முன்வைத்தல்களும் காரணமாயின.

இது விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்த ஒரு முக்கிய வெற்றி என்றும் கூடக் கூறமுடியும்.

இரண்டாவது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி ரணிலின் ஆட்சியைக் கலைத்து விடத்தூண்டும் பேரினவாத அழுத்தங்களுக்கு இசைவாக நடந்துகொள்ள முயன்று ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு நெருக்கடிகளைக் கொடுத்தும் அச்சுறுத்தல்களை விடுத்தும் பகிரங்கமாகவும், ரகசியமாகவும்பல நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் ரணிலின் அரசு எவ்வித அச்சமுமின்றி அவற்றை ஒரு பொருட்டாகக் கருதாது சந்திரிகாவின் அதிகாரங்களைக் குறைக்கும் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தீவிரமாகச் செயற்பட்ட போது ரணிலுடன் சமரசம்பேச முற்பட்டது சந்திரிகாவின் மற்றொரு பலவீனமான பக்கத்தை வெளிக்காட்டி ரணிலுக்கு பலத்தைக் கூட்டியது. இது அவருக்குக் கிடைத்த இரண்டாவது அடியாகும். சந்திரிகா எந்தக்காலத் திலும் தன்னை மீறி, தன்அதிகாரத் தையே துண்டிக்க பாராளுமன்றம் தயாராகுமெனவும் அதற்கு தனது சகாக்களில் சிலரே ஆதரவளிக்க முனைவார்கள் எனவும் நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டார்.

விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க விவகாரம் ஐ.தே.முன்னணி அரசு ஜனாதிபதி சந்திரிகாவை ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பதையும் அது மக்கள் ஆதரவு பலத்தின் பின்னணியில் அமைதித் தீர்வுக்கு முனைந்து செயற்பட தீவிரம் காட்டுவதையும் வெளிப்படுத்தியுள்ளது. இதுவும் சந்திரிகா அம்மையாருக்குக் கிடைத்த மிகப்பெரும் அவமானமாகும்.

பௌத்த பீடாதிபதிகளைக்கொண்டு தாய்லாந்தில் பேச்சுவார்த்தைக்கான இடத்தை வழங்கக் கூடாது என்றும் ஒரு பௌத்த நாடு இன்னொருபௌத்த நாட்டுக்கு துரோகம் செய்யக் கூடாது என்றும் பௌத்தத்தின் வ்ரோதிகளும் தாய்லாந்தை ஆயுதக் கடத்தலுக்குப் பயன்படுத்துகின்றவர்களுமான வீடதலைப் புலிகள் பேசுவதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் கோரிக்கை விடுத்தும் கூட தாய் அரசு அதனை நிகாரித்து விடுதலைப் புலிகளை வரவேற்று 'சிறிலங்கா அரசுடன் பேச இடம்வழங்கி, பாதுகாப்பு வழங்கி விருந்தினராக உயர்கௌரவப்பட்டம் அளித்தமையானது சந்திரிகாவுக்குக் கிடைத்த மற்றொரு மகத்தான தோல்வியாகும்.

பேச்சுவார்த்தை முடிவில் அரசும் விடுதலைப் புலிகளும் பெரும் திருப்தி தெரிவித்ததுடன் அடுத்த சுற்றுப் பேச்சுக்கான காலநேர நிர்ணயமும் செய்துள்ளமையானது சந்திரிகாவால் தாங்கிக்கொள்ள முடியாத தொன்றேயாகும்.

'கட்சிதாவுவோரின் தோலை உரிப்பேன்' என்று முன்பொருதடவை தனது கட்சிக்காரரையே பார்த்துக் கூறியவர் பின்னர் ரணிலை கழுத்தில் பாய்ந்து கடிப்பேன் என 'ட்ராகுலா' பட பேய்மனிதனின் பாணியில் அச்சுறுத்தியுள்ளார். இப்போது ஐந்நூறு பேரையாவது கொல்லாமல் சாகமாட்டேன் என பகிரங்கமாகவே உளறிமிரட்டியுமுள்ளார்.

இவையெல்லாம் இயலாமையின் முனகல்தான்.

சந்திரிகா இன்று இயலாமையின் உச்சக்கட்ட பலவீனத்துடன் தனது அற்புதமான கடந்த காலக் கனவுகளுடன் எதிர்கால அதலபாதாள அவல நிலைகுறித்த அச்சத்துடன் - சமகாலத்தின் சவால்களை சமாளிக்க முடியாதவராக தனக்குத் தானே புலம்பிக்கொள்ளும் ஒருவராகவே உள்ளார்.

இன்னமும் அவர் கையில் நிறைவேற்று அதிகார மந்திரக்கோல் இருக்கவே செய்கிறது. ஆனால் அதனைப்பாவித்தால் ஏற்படக் கூடியதான எதிர்விளைவுகள் பண்டா பாரம்பரியத்தின் இறுதி அஸ்தமன அத்தியாயங்களை எழுதிவிடுமோ என்ற அச்சமும் அவரை ஆக்கிரமித்தே நிற்கிறது.

இலக்குவன்

# குடாநாடு: சமாதானத்துக்கான சூழலில் வதந்திகளும் தொல்பொருட்களின் இழப்பும்

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாகத் திறக்கப்பட்ட ஏ-9 நெடுஞ்சாலை யாழ்ப்பாணத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆறு மாதங்களில் குடாநாடு மக்கள் தொகையில் அதிகரிப்பைக் கண்டுள்ளது. 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து போயிருந்த பலர் இப்போது திரும்பி வந்துள்ளனர். இன்னும் வந்து கொண்டிருக்கின்றனர்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு கடைசியாக யாழ்ப்பாணத்தைக் கண்ட தென்னிலங்கை மக்களும் வந்துபோகத் தொடங்கி விட்டனர். இங்கிருந்தும் மக்களும் மாணவர்களும் தென்னிலங்கை நோக்கி சுற்றுலாச் செல்லும் படலங்கள் அதிகரித்து விட்டன. இவை வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும் ஒன்றாக நோக்கப்படுகின்றன.

கடந்த ஆறு மாதங்களாக விரியும் இந்த சமாதானத்துக்கான காலத்தில் இப்போது இரண்டு விடயங்கள் குடாநாட்டில் ஏற்கத்தகாத மாறுதலைக் கொண்டுள்ளன. சில நாள்களாகப் பரவியிருக்கும் வெள்ளை வானில் ஆட்களைக் கடத்துதல் பற்றியும் குடாநாட்டில் இருந்து தொல் பொருட்கள் தென்னிலங்கை நோக்கி கொண்டு செல்லப்படுவது பற்றியும் விரும்பத்தகாத செய்திகள் சமாதானத்துக்கான சூழ்நிலையில் வெளிவந்துள்ளன. எவரது கவனமும் இந்த விடயங்களில் புறக்கணிக்கத்தக்கதாக இல்லை.

வெள்ளை வானில் சிறுவர்கள் உட்பட இளைஞர்களையும் யுவதிகளையும் இனந்தெரியாதோர் கடத்திச் செல்வதாக வந்த செய்தி பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. பெற்றோர் மத்தியிலும், விடுதலைப்புலிகள், பொது அமைப்புக்கள் மத்தியிலும் பெரும் அதிர்வை உண்டு பண்ணியது.

எட்டு மாதங்களுக்கு முன்புஇத்தகைய சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்டால் அதன் நிலைமை வேறு, அப்போது இருந்த சிறிலங்கா இராணுவத்தின் மிகக் கடுமையான ஆக்கிரமிப்புப் பிடிக்குள் எந்தக் கண்காணிப்பும் அற்ற யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கு - கிழக்கு முழுவதிலும் இளைஞர் யுவதிகள் கடத்தப்பட்டார்கள், காணாமல் போனார்கள்.

இப்பொழுது சமாதானத்திற்கான சூழலில் இரு இனத்தவர்கள் மத்தியிலும் நல்லெண்ணம் வளர்க்கப்படும் போது இத்தகைய சம்பவங்கள் நடப்பதாகக் கூறப்படுவது எதிர்கால நிலைமைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. பாதை திறக்கப்பட்ட பின் தென்னிலங்கையில் இருந்து வரும் வாகனங்களை சந்தேகத்துடன் நோக்கும் நிலைக்கு மக்களைத் தள்ளி விட்டி ருக்கிறது.

ஆனால், வெள்ளை வானில் ஆட்கள் கடத்தப்படுவதான செய்திகள் பெருமளவில் ஆதாரம் அற்றனவாக உள்ளன.சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முயலும் சக்திகளின் திட்டமிட்ட வதந்திகளாகவே இவை கருதப்படுகின்றன. ஏனெனில் இறுதியாக வந்த, மாணவர்கள் கடத்தப்பட்டதாக வந்த செய்திகள் எவையும் ஆதாரபூர்வமானவையாக இல்லை.

முதலில் வெளியான ஒரு இளைஞன் கடத்தப்பட்டு வானில் கொண்டு செல்லப்பட்டு அடையாளம் தெரியாத பற்றைகள் நடுவே இறக்கப்பட்டதாகவும், அவ்விளைஞன் இயற்கைக் கடன் கழிக்க கட்டுக்களை அவிழ்ப்பித்து தப்பி வந்ததாகவும் தெரிவிக்கப்படும் செய்தி மறுக்கப்படாவிட்டாலும் அதன் பின் வந்த இத்தகைய தகவல்கள் அனைத்தும் வதந்திகளே.

இத்தகைய செய்திகளை

**ஞாபகன்**

உறுதிப்படுத்தாத வதந்திகளை குடாநட்டின் பத்திரிகைகளே வெளியிட்டு பதட்டத்தை ஏற்படுத்தின. ஊர்ஜிதம் செய்யப்படாதவைகளை முதல் நாள் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தின..

மறுநாள் அவை வெறும் வதந்திகளே எனக் கூறின. இது பலரிடையே விசனத்தையும் ஏற்படுத்தியது.

சமூகப் பொறுப்பற்று செய்திகளை வெளியிடும் இவை குடாநாட்டில் பெருகிவிட்ட பத்திரிகைகள் மத்தியில் தமது விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளும் பரபரப்பூட்டலாக கருதப்படுகின்றது.

சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பாகவும் இத்தகையதோர் வதந்தி பரவியிருப்பது சிறுவர்களைக் கடத்தி அவர்களின் கண்களைப் பிடுங்கி விட்டு அவர்களை ஆங்காங்கே கைவிட்டுச் செல்வ தாக மக்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது. எந்தவித ஆதாரங்களும் அற்ற அத்தகைய சம்பவங்களாகவே இவை உள்ளன.

ஆயினும் முதலில் வெளியான குறித்த இளைஞன் கடத்தப்பட்டது பற்றிய செய்தி இதுவரை யாராலுமே மறுக்கப்படாததால் எல்லோர் மத்தியிலும் பதட்டம் இருக்கவே செய்கின்றது. ஒரு மாதத்திற்கு முன்பு பல்கலைக்கழக இறுதி வருட மாணவன் ஒருவர் இவ்வாறு இனந்தெரியாதோரால் கடத்தப் பட்டார். பின்னர் முகமாலைப் பகுதியில் மயங்கிய நிலையில் கைவிடப்பட்டிருந்தார்.

இப்படி ஓரிரு சம்பவங்களே நிகழ்ந்த போதும் அன்றாடம் மாணவர்கள் கடத்தப்படுவதாக பரவும் செய்திகள் பாடசாலைகளில் மாணவர் வரவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய நிலைமை சமாதான முயற்சிகளை விரும்பாத சக்திகளின் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியே என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்கள் விரும்பும் சமாதானத்துக்கான சூழலில் உடனடிப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இச்சம்பவங்களும் வதந்திகளும் அமைகின்றன. உடனடியாகவும் நீண்ட கால நோக்கிலும் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை கேள்விக்குள்ளாக்கக் கூடிய மற்றைய விடயம் தொல் பொருட்கள் விற்பனையாவது பற்றியது ஆகும்.

இப்போது யாழ்ப்பாணம் பெரும் வர்த்தக சந்தையாக மாறி விட்ட நிலையில் வருமான வழியாகவோ பண்டமாற்றாகவோ தொல்பொருட்களை குடாநாட்டு மக்கள் கருதத் தொடங்கி விட்டனர்.

குறிப்பாக ஒன்றிரண்டு நூற்றாண்டு பழைமையான ஆர்வமான பாவனைப் பொருட்களை தென்னிலங்கை வியாபாரிகளுக்கு விற்பதும் அவை வாகனங்களில் கண்டி நெடுஞ்சாலை வழியாக தமிழ்ப் பகுதி களைக் கடப்பதும்

> **வரலாற்று ஆதாரங்களாக பயன்படத்தக்கவற்றை இழப்பது, கூடுதலாக கிராமப்புற மக்களாகவோ வறியவர்களாகவோ இருப்பினும் இந்தத் தவறுகளுக்கான பொறுப்பு யாழ்ப்பாண கல்விச் சமூகத்தைச் சார்ந்ததே.**

சமூக அக்கறை யாளர்களை வருத்தும் ஒன்றாகி யுள்ளது. வெற்றிலைத் தட்டங்கள், மூக்குப் பேணிகள் முதல் சைவசமயம் சார்ந்த வணக்கத்தல வாகனங்கள் வரை தமிழர்களின் அண்மைக்காலம் வரையான வாழ்வு முறையைக் காட்டும் அரும் பொருட்கள் கைநழுவிப் போகின்றன..

இவை விற்கப்பட பிரதானமான இரு காரணங்கள் மேலேழுந்த வாரியாக கூறப்படுகின்றன. ஒன்று இப் போதைய வாழ்வு முறைக்கு அவை தேவையற்றனவாக இருப்பது. தென்னிலங்கையில் இருந்து வரும் நவீன நுகர் பொருட்களை வாங்குவதற்கான பணத் தேவையை ஈடுசெய்வது மற்றையது.

ஆயினும் நீண்ட கல்விப் பாரம் பரியம் கொண்டதான யாழ்ப்பாணத்தில் இவை ஏற்றுக் கொள்ளக் கூடியன அல்ல. தேவையற்றது என விற்கும் பொருளை விலை கொடுத்து அந்நியர் ஏன் வாங்க வேண்டும் என்ற சாதாரண கேள்வியை எழுப்பினாலே அதன் பின்னால் உள்ள தார்ப்பரியம் புரியும். நமக்குத் தேவையற்றதாய் இருப்பது மற்றையோருக்கு தேவைப்படும் போது அதன் நீண்ட காலப் பயன்பாடு பற்றியும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வரலாற்று ஆதாரங்களாக பயன்படத்தக்கவற்றை இழப்பது, கூடுதலாக கிராமப்புற மக்களாகவோ வறியவர்களாகவோ இருப்பினும் இந்தத் தவறுகளுக்கான பொறுப்பு யாழ்ப்பாண கல்விச் சமூகத்தைச் சார்ந்ததே.

அதுபற்றிய போதிய விழிப்புணர்வு ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டமையே காரணம் என்பதை அவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.


வறுமையின் காரணமாகவும் விற்கின்றார்கள் என்ற போதிலும் அதற்கான அக்கறை வரலாற்றாளர்கள், அது சார்ந்தோர் மத்தியில் இருந்தும் செயற்படுத்தப் படாமையே பெரும் உறுத்தலாகின்றது. ஆனாலும் அதிக வருவாய் கொண்ட ஆலயங்கள் கூட அவற்றை விற்கத் தலைப்படுவது சமூக அக்கறையற்ற வெறுமனே ஆகமங்களை மட்டும் சிரமேற் கொள்வதாகவே உள்ளது.

இப்போது விடுதலைப்புலிகள் இவற்றை விற்பதும் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் கொண்டு செல்வதும் தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். யாழ் பல்கலைக்கழக நுண்கலை, வரலாற்று துறைகள் இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

ஆயினும் பல்கலைக்கழகம் கடந்த ஏழாண்டினுள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட தொல்பொருட்கள் பற்றியோ தனிப்பட்ட ஒருவர் சேர்த்து பாதுகாத்து வந்த தொல்பொருட்களை பராமரிக்க உதவுவது பற்றியோ கவனம் செலுத்தத் தவறி விட்டதாக பரவலான குறை கூறல்களும் இருக்கின்றன.

ஆயினும் குடா நாட்டில் சில நூறு ரூபாய்களுக்கு வாங்கப்படும் இப்பொருட்கள் கொழும்பில் பல லட்சக்கணக்கில் நூதனசாலைகளுக்கு விற்கப்படுவது மூலம் அது தமிழ் மக்களின் வாழ்விற்கு எத்துணை முக்கியமானது என்பதை விளங்கிக் கொண்டு செயற்படுவது அவசியம்.

தாய்லாந்தில் ஆரம்பமாகிய சமாதானப்பேச்சு வார்த்தைகளின் பலனையும் அதனூடாக எதிர் காலத்தில் தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய வரலாற்றுத் தொடர்ச்சியையும் நிறுவுவதற்கான நிரூபணத்தையும் இவை பாதித்து விடக்கூடாது. ❑



## கருத்துப் பகிர்வு

அன்புடன் என் இதயம் கவர்ந்த வெள்ளிநாதமே!

ஒவ்வொரு வெள்ளியும் உனக்காக காத்திருப்பவர்களில் நானும் ஒருத்தி. வெள்ளிநாதமே உன்னில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களும் என்னைக் கவர்ந்தவைகளே! உனக்கு நிகர் நீயே.

கீழ்க்காணும் சிந்தனைகள் கூட மிகவும் நன்றாகச் செயற்படத் தூண்டுகின்றது. இளைய நாதமே பிறமுக அறிமுகம் மூலம் மிகவும் முக்கியமான தரவுகளைப் பெறமுடிகிறது. மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

சு.கீர்த்திகா
(போராளி)

அன்புடன் வெள்ளி நாதமே!

13-09-2002ம் திகதிய வெள்ளி நாதத்தில் இடம்பெற்ற பெற்றோர்- குழந்தை உளவியல் கட்டுரை மிகவும் தெளிவான விளக்கத்தைத் தந்தது. இவ்வகையான படைப்புக்கள் வெள்ளிநாதத்தில் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. மற்றும் நிலாந்தனின் கட்டுரைகள் அரசியல் நிலவரத்தை நன்றாகவே பிரதிபலிக்கின்றன.

ஆ.பூசுந்தரி
புற்றளை

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்கட்கு,

தமிழீழ மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட ஈழநாதம் பத்திரிகையானது தற்போது பார்ப்பவர்களின் மனத்தினைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் பல்சுவை அம்சங்களுடன் வெளிவருகின்றது. தாரகை நடுவண் தன்மதிபோல் .ஆங்காங்கே புற்றீசல்களாக வெளிவந்து கொண்டிருக்கும் பல பத்திரிகைகள் மத்தியில் எம் இதயங்கவர் ஈழநாதம் விளங்குகிறது.

அதிலும் வெள்ளிநாதத்தின் பெருமை சொல்லில் அடங்காது. எமது பத்திரிகையான வெள்ளிநாதம் மென்மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

எழில்வேந்தன்
(போராளி)

மதிப்புடன் வெள்ளிநாதத்திற்கு!

யாழில் வசித்தபோது ஈழநாதம் பத்திரிகையின் வாசகருள் ஒருவனாக இருந்தேன். மன்னாரில் குடிவந்தபோது அதை வாசிக்க நீண்டகாலமாக முடியாது இருந்தது. தற்போதைய அமைதிச் சூழலில் மீண்டும் வெள்ளிநாதத்தைப் படிக்கும் நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளமை எனக்கு மிகவும் மகிழ்வான விடயமாகும்.

அரசியல் சம்பந்தமான ஆணித்தரமான அலசல்கள், பிறமுக அறிமுகம், கட்டுரைகள், கவிதைகளையும் வெள்ளிநாதம் தாங்கிவருவது அதன் தனிச்சிறப்பு..

அதற்காக உண்மையிலேயே வெள்ளிநாதத்தை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

சி.சிவபாலன்,
கோண்டாவில்.

அன்புடன் வெள்ளிநாதமே!

உன்னில் தாங்கி வரும் எல்லா அம்சங்களும் தரமானவையாக உள்ளது. ஒவ்வொரு வாரமும் நீ ஏதோவொரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்துவது பாராட்டுக்குரியது. மேலும் மேலும் நீ வளர்ச்சியுற எனது நல்லாசிகள்.

தற்காலத்தில் எமது மண்ணில் நடைபெறும் சம்பவங்கள் கட்டுரைகளாக வெளிவருவது மிகவும் அவசியம். அவை சமுதாயம் சீர்பெறுவதற்கு அவசியமானதாக இருக்கும்.

அத்தோடு இளையநாதம் பகுதியில் மாணவர்களின் சொந்த ஆக்கங்களை அதிகளவில் பிரசுரிக்க வேண்டும் என்பது எனது அவா.மென்மேலும் ஈழநாதம் பத்திரிகை வளர்ச்சியுற நான் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சி.உதயகலா,
தருமபுரம்.

தங்களால் முடியாததை முடியுமென்று எண்ணுவதே, பெரும்பாலோரிடம் உள்ள சங்கடம். - மாக்ஸிம் கோர்க்கி

## விண்ணியல்







சூரியத்தொகுதியில் கட்டற்று உலாவும் பல மைல்கள் சுற்றளவு கொண்ட பாறை மலைகளில்

ஒன்று 2019 பெப்ரவரியில் பூமியுடன் மோதும் வாய்ப்புள்ளது. இது விஞ்ஞானிகளின் எச்சரிக்கை.

வியாழனுக்கும்- செவ்வாய்க்கும் இடையே உலவும் இப்பாறைக் கோள்கள் 'அஸ்ரொய்ட்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றன.



வலுக்குறைந்த ஈர்ப்புவிசை கொண்ட இந்த பாறைக் கோள்கள் சுற்றுப்பாதைகளை விட்டு விலகி அடிக்கடி பூமிக்கு அண்மையாக

# பூமியை பேரழிவிலிருந்து காப்பாற்ற மூன்று வழிகள்...

செல்வதுண்டு. இத்தகைய பாறைக்கோள் ஒன்று பல மில்லியன் ஆண்டுகளின் முன் பூமியில் மோதியதால் டைனோசர் என்ற ராட்சத விலங்குகள் அழிந்தன என்பது ஒரு கருத்து. இது இதுவரை அறுதியாக உறுதி செய்யப்படவில்லை.

இப்படிப்பட்ட பாறைக்கோள் ஒன்று 2019 பெப்ரவரியில் பூமியில் மோத வாய்ப்பிருப்பதாக பிரிட்டன் விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் இத்தகைய பாறைக்கோள் ஒன்று பூமியை மிக அண்மித்துச்சென்றது. இப்போது 2001 NT-7 என்ற பாறைக்கோள் 2019 பெப்ரவரி 1இல் பூமியுடன் மோதும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மணிக்கு 60 ஆயிரம்மைல் வேகத்தில் பயணிக்கும் அது பூமியுடன் மோதினால் பல மில்லியன் ஐதரசன் அணுகுண்டுகள் வெடித்தால் ஏற்படும் அழிவு உண்டாகும்.

இத்தகைய மோதுகைகள் ஏற்பட்டால் என்ற கேள்விக்கு பதில்தரும் வகையில் அமெரிக்காவின் நாஸா திட்டங்களை தீட்டிவருகின்றது.

2முதல் 4 கிலோமீற்றர் நீளமானதும் 11 மில்லியன் தொன்னை எடை கொண்டதும் நிமிடத்துக்கு 17மைல் வேகத்தில் நகர்வதும் சூரியனைச் சுற்ற 837 நாட்களை எடுப்பதுமான 2002 NT-7 பாறைக்கோளின் பாதையை திருப்ப பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. அணுசக்தியால் இயங்கும் தகவு கொண்ட விண்கலம் ஒன்றை 2002 NT-7க்கு அனுப்பி அது ஒரு குடைவடிவ வலைத்தட்டு மூலம் தள்ளி அதன் பாதையை மாற்றுதல்.

2. சூரியப்படலம் ஒன்றுடைய செய்கோளை அனுப்பி NT-7இல் தரையிறங்கச் செய்து சூரியசக்தியை அதன்மீது பிரதிபலித்து அதன் பாதையை திசை திருப்பல்.

**மணிக்கு 60 ஆயிரம்மைல் வேகத்தில் பயணிக்கும் அது பூமியுடன் மோதினால் பல மில்லியன் ஐதரசன் அணுகுண்டுகள் வெடித்தால் ஏற்படும் அழிவு உண்டாகும்.**

3. அணுகுண்டு செய்கோளை அனுப்பி - NT-7க்கு அண்மையாக அதனை வெடிக்கச் செய்வதன் மூலம் - அதிர்வலைகளையும் கதிர்வீச்சையும் உண்டாக்கி அதன் பாதையை திசை திருப்பல்.


இந்த 3 திட்டங்களை முன்வைத்து நாஸா பரிசீலனை செய்கின்றது.

எது எப்படி நடக்கின்றது என்பதை 2019 வரை பொறுத்திருந்து பார்ப்போம் ●

தமிழில்:
அறிவன்

---

# உ[illegible]பிலை நோக்கிய ப[illegible]க்குறிப்புகள்



நாடகத்தில் ஒரு காட்சி



பார்வையாளர்களின் ஒரு பகுதியினர்

உண்மையானதும் நிரந்தரமானதுமான ஒரு சமாதானத்தின் பாதையில் நெருஞ்சி முட்களாக நெருடிக்கொண்டிருப்பது பயங்கரவாத தடைச்சட்டமும், அதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்னமும் சிறையில் வாடிக் கொண்டிருப்பதும் ஆகும். தமிழர்கள் என்பதற்காக கைது செய்யப்பட்டு சித்திரவதை மூலம் அவர்களிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலமே அவர்களைத் தண்டிக்கும் இச்சட்டமூலம் சிறிலங்காவில் மட்டுமே நீண்டகாலம் நிலவி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை மனித உரிமைகள் சாசனத்தின் பாதுகாவலர்கள் என மார்தட்டிக்கொள்ளும் எந்த ஒரு உலக மனித உரிமைகள் நிறுவனமும் இதுவரை இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கெதிராகவோ அன்றி இதன் செயற்பாட்டிற் கெதிராகவோ குரல் கொடுக்கவில்லை என்பது ஆச்சரியத்தையும் துயரத்தையும் ஒருங்கே அளிக்கின்ற ஒரு செயற்பாடாகும்.

1977 யூலை மாத்தில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆறு மாதங்களில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவது எனும் இலக்கில் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட இச்சட்டமூலத்தை ஆதரித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினரில் ஓரிருவர் இன்னும் பாராளுமன்றத்தில் அதே கட்சியின் உறுப்புரிமையில் வீற்றிருக்கின்றனர்.

நள்ளிரவில் கடத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட இன்பம், செல்வம் தொடங்கி, குருநகர், பலாலி, ஆனையிறவு, வெலிக்கடை, பூசா, பிந்துனுவெவ என தொடர்ந்த பயங்கரவாத தடைச்சட்ட சித்திரவதைக்கூடங்களில் உலர்ந்து போகாத ஆயிரமாயிரம் மனிதர்களின் குருதிக் கறைகளை எப்படி நாம் மறந்துபோக முடியும். தமிழர்கள் என்பதற்காகவே கேள்வி வரையறையின்றி கைது செய்யவும் சித்திரவதை செய்யவும் தேவை எனில் வீதியில் படுகொலை செய்யவும், பெண்களை அவமானப்படுத்தவும், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தவும், தமிழ் மக்களை பயணங்களிலும், வீடுகளிலும் அவமானப் படுத்தவும் வழிசமைத்த இந்த சட்ட மூலத்தை எதிர்த்துக் குரல்கொடுக்க எத்தனை பேர் முன்வந்தனர்?.

இப்போது மட்டுமென்ன வெளியில் வீசுகின்ற சுதந்திரக்காற்று தம்மை மட்டுமேன் தழுவிக்கொள்ள மறுகிக்கிறது எனும் தவிப்பில் நான்கு சுவர்களின் இருட்டுக்குள்ளே பெருமூச்சோடு வாழுகின்ற அப்பாவி அரசியல் கைதிகளின் நிலைப்பாடு ஏன் மனித மனங்களைத் தொடவில்லை எனும் கேள்வி எழுகிறது.



உணர்ச்சி வசப்பட்டு அழும் பார்வையாளர்கள்

கணவன், மனைவி இருவருமே வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டு அடைந்த துயரத்தின் குரல்களை செவிமடுத்த வன்னி ஆசிரியர்கள் குழு ஒன்று கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் க.விஜய சேகரனின் நெறியாள்கையில் உருவான இவ்வரங்க முயற்சி மூலம் அவர்களின் மனஉணர்வுகளையாவது உலகிற்கு வெளிச்சமிடும் இலக்கோடு கலைப்பயணத்தை அரங்காற்றுகை ஒன்றுடன் ஆரம்பித்தனர். கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் ஆற்றுகையை அரங்கேற்றியதுடன் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சிறையில் இருந்த சகோதரர்களையும் பார்வையிட்டனர். களுத்துறை, வெலிக்கடை ஆகிய இடங்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டது. குறைந்தது மூவராவது பார்வையிட முயன்றபோதும் அதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை என்பதே இன்றைய சூழ்நிலையின் யதார்த்தமாகும்.


**ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை மனித உரிமைகள் சாசனத்தின் பாதுகாவலர்கள் என மார்தட்டிக்கொள்ளும் எந்த ஒரு உலக மனித உரிமைகள் நிறுவனமும் இதுவரை இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்திற் கெதிராகவோ அன்றி இதன் செயற்பாட்டிற் கெதிராகவோ குரல் கொடுக்கவில்லை என்பது ஆச்சரியத்தையும் துயரத்தையும் ஒருங்கே அளிக்கின்ற ஒரு செயற்பாடாகும்.**

பல்வேறு இடங்களில் பார்வையாளர்களின் நெகிழ்ச்சியுற்ற மனங்கள் சிந்திய கண்ணீரோடு சங்கமித்த இவ்வரங்கம் கொழும்பில் தமிழ்ச் சங்கத்தில் அரங்கிடப்பட்டபோது வித்தியாசமான உணர்வு வெளிப்பாட்டையே சந்தித்துக் கொண்டது. எனினும் மனம் நெகிழ்ந்து போனவர்கள் அங்கு இல்லாமல் போகவில்லை. கொழும்பில் வாழும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கட்கு வழங்கப்பட்ட அழைப்பை எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் ஓரிருவர் எமது அரங்க செயற்பாட்டிற்கு உதவியிருந்தனர். மாறிவரும் உலகச் சூழலில் அரங்கு ஒரு வலுவான தொடர்பூடகமில்லை எனப் பலர் வாதிட்டனர் எனினும் பல்வேறு எழுச்சிகளை உலக மட்டத்தில் ஏற்படுத்துவதில் இன்னும் அரங்கின் பங்களிப்பு உள்ளதை மறுக்க முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவதும், அவர்களுக்கான புனர்வாழ்வு உறுதிப்படுத்தப் படுவதும், அவசியமாகின்றது மனித அவலங்களுக்கு அடிப்படையாக அமைந்ததும் தமிழ் மக்களும் இந்த நாட்டில் சமத்துவமுள்ள குடிமக்கள் என்பதை நிராகரித்ததுமான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக் கோருவதுமான ஒரு மக்கள் எழுச்சி ஏற்படுமானால் அதுவே இந்த அரங்கின் வெற்றியாய் அமையும். ●

அன்ரன் அன்பழகன்

பளிங்கு என்று இளமை கருதியது. பனித்துளி என்று முதுமை உணர்கிறது. - ராபர்ட் பிரௌனிங்



# நூல்நோக்கு

கவிஞர் தி. உதயசூரியன் எமது மாவட்டத்தில் நிரந்தரமாகத் தொழில் புரியும் ஆசிரியர்களுள் ஒருவராவர். இவர் ஏற்கனவே "கண்ணம்மா" என்ற

**நூல் :- பெயரறியாப் பெரியோன்**
**ஆசிரியர் :- தி. உதயசூரியன்**

நூலினை வெளியிட்டுள்ளார். பிறப்பு-இறப்பு இரண்டுக்கும் இடைப்பட்ட இந்த வாழ்க்கை என்பவை பற்றிய எமது கருதுகோள்களை மறு பரிசீலனை செய்ய வைத்த நூல் கண்ணம்மா.

பெயர் அறியாப் பெரியோன் காலமும் கவிதையும் என்ற இரண்டாவது நூலில் எல்லாமாக இருபந்தைந்து கவிதைகளும் அவற்றுள் ஒன்றான "பெயர் அறியாப் பெரியோன்" என்ற கவிதையை மேற்கோளாகக் காட்டி எழுதப்பட்ட கட்டுரையும் நூலின் பின்னிணைப்பாக உள்ளது.

உதயசூரியன் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாத ஒருவர். ஆயினும் அவரது கவிதைகள் யாவராலும் எழுதிற் புரிந்து கொள்ளக்கூடியவை. பாஞ்சாலி சபத முகவுரையில் பாரதி கூறுகின்ற "எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய் மொழிக்கு புதிய உயிர் தருவோன் ஆகின்றான். ஓரிரண்டு வருடத்து நூற் பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி.........." என்ற வாசகங்களை நன்கு விளங்கி உள்வாங்கிக் கொண்டு எழுதப்படுபவை போல் உதயசூரியனது படைப்புக்கள் அமைந்துள்ளன. ஆனாலும்

**ப.அரியரத்தினம்**

சொற்களின் ஓசை, ஒத்திசைவு, சந்தம் என்பவற்றை அதிகம் கவனத்தில் எடுக்காத ஒருவராகவே அவரது கவிதைகள் உதயசூரியனை இனம் காட்டுகின்றன.


பெயர் அறியாப் பெரியோன் என்ற நூலில் உள்ள கவிதைகள் எமது காலத்தின் பதிவுகளாக அமைந்தவை என்பதில் ஐயமில்லை. இதுபற்றி நூலாசிரியரே தனது உரையில் "எங்களுடைய சமகாலம் எத்தகைய கொடூரங்களை எங்கள் மீது திணித்தது என்பதை நானும் எனது சமகால மக்களும் அறிவோம். எங்களைக்கொன்றே புதைப்பது என்று தீர்மானித்துத் துரத்திய காலத்தை வென்றே வாழ்வதென்று சபதம் எடுத்த எமது அனுபவப் பதிவுகளாக எமது மண்ணில் இருந்து பல நூல்கள் வெளிவந்துள்ளன" என்று கூறுகின்றார். ஆனால் இவை மட்டுந்தானா காலத்தின் பதிவுகள்? எமது எழுத்தாளர்கள், கவிஞர்கள் அறிஞர்கள் எமது காலத்தை முழுமையாகப் பதிவு செய்து விட்டார்களா? காலத்தை வென்று விட்டார்களா? என்பன விடை காணபபட வேண்டிய வினாக்களாகும்.

உதயசூரியன் கற்பித்தலைத் தனது தொழிலாகக் கொண்டவர் என்பது அவரது கவிதைகளிலும் ஆங்காங்கே புலப்படுகின்றது. "ரயர் நூலின் சுயசரிதை என்ற கவிதையின் தலைப்பே இதனைப் பறைசாற்றுகின்றது. பள்ளிப் பிள்ளைகள் புத்தகத்தின் சுயசரிதை, பேனாவின் சுயசரிதை என்று எழுதுவதைப் போல் ரயர் நூலின் சுயசரிதை என்ற தலைப்பும் அமைந்துள்ளது. இவ்வாறே சோக்கிரட்டிஸ்ஸின் அழிவும் எனது தீர்மானமும் என்ற கவிதையில்

"என் பிள்ளைகள்
சித்தியடைகின்றபோது-நான்
முத்தியடைகின்றேன்"

என்று நல்லாசிரியர் ஒருவரின் குறிக்கோளை வெளிப்படுத்துகின்றார்.

ஒரு படிப்பாளி, ஒரு படைப்பாளி ஆகிய இருவேறு நபர்கள் தம்முள் தாமே வலிமை உள்ளவர்கள் என மோதிக் கொள்ளும் போராட்டக் களமாகவே உதயசூரியனது படைப்




புலகம் இன்று தென்படுகின்றது. இன்று நம்மிடையே இருக்கக் கூடிய வளர்ந்துவரும் இளம் படைப்பாளிகளிடையே பழந்தமிழ் இலக்கண, இலக்கிய ங்களிலே ஆழ்ந்த புலமையும் அவற்றினூடனான பரிட்சயமும் உள்ளவர் உதயசூரியன். இப்பண்பு அவரது கவிதைகள் சிலவற்றில் இயல்பாகவே வந்து விழுகின்ற வார்த்தைகளில் இருந்தும் தெரிய வருகின்றது. எடுத்துக்காட்டாக,

"பகைவனே,
எமக்கு நீ நல்லன
செய்தாய் அல்லன்.
உன்னை ஆளும்
சீமாட்டி நல்லன
செய்தாள் அல்லள்
போரியற் தருமம் நோக்கின்
அந்தப் போதி மாதவனுக்கும்
நீர் நல்லவர் அல்லர்'' என்று

உதயசூரியன் பகைவரைத் தூற்றும்போது

"எனக்கு நல்லையும் அல்லை நீ யென் மகன் பரதன்
தனக்கு நல்லையுமல்ல அத் தருமமே நோக்கில்
உனக்கு நல்லையுமல்லை......"

என்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் கைகேயி வாயிலாக மந்தரையைத் தூற்றுவது நம் காதில் ஒலிக்கின்றது.

இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது உதயசூரியன் தனது கவிதைக்கான வார்த்தைகளைக் கம்பனிடம் கடன் வாங்கினாரா, என்ற எண்ணம் படிப்பவர்க்கு எழும். எனினும் நூலைத் தொடர்ந்து வாசிக்கையில் ஒரு காதற் கவிதையில் வரும்

"கம்பன் நெஞ்சிலூறிய
நல்ல கவிதையடி நீ எனக்கு" என்ற

அடி கம்பரையும் அவனது கவிதைகளையும் உதயசூரியன் உயர்வாக மதிக்கின்றார் என்பதைக் காட்டுகின்றது. அத்தகைய உயர்ந்த மதிப்பே முன்னவர் வார்த்தைகளைப் பின்னவர் பிரயோகிக்கக் காரணமாயுள்ளது.

''முன்னோர் மொழிப் பொருளேயன்றி யவர் மொழியும் பொன்னே போற் போற்றுவ மென்பதற்கும்...." எனத் தொடரும் பழந்தமிழ் இலக்கணச் சூத்திரம் உதயசூரியுன் என்ற படிப்பாளிக்குச் சார்பாகவே உள்ளது. □




"அழகான இதழ்கள்., இதழ்களைத் தாங்கி நிற்கும் பிஞ்சு.... காய்., அட பழுத்தும் பூவை மறக்காத தடயங்கள்., தன் காய்களைத் தாங்குவ தற்காகவே வளைந்த கொப்புகள். அது சரி ஏன் இந்த முட்கள்...? ஓ.. உனக்கும் பாதுகாப்புத் தேவையோ...?தன் இலைகளையே சருகாக்கி, எருவாக்கி இந்தக்கழிவு நீரில் உயிரோட வளர்ந்து நித்தம் துளிர்விட்டு.. பிறருக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த அழகான மாதுளை மரம் எவ்வளவு செழிப்பாயிருக்கு என்ன அழகு., என்ன திமிர்., அட குருவிச்சை மரம்., மாதுளையை விட செழிப்பாய் வளருது. ஓ.. ஒட்டுண்ணி., மாதுளையின் உயிரை உறிஞ்சி வளருகிற ஒட்டுண்ணி சுயமான மண்ணில் வேர் பரப்பத் தெரியாத உனக்கு ஒரு பூ.. ஒரு பிஞ்சு., குருவிச்சை மரம் முகுந்தனின் அழகான கற்பனையைக் கலைத்து., அவனுக்குள் உணர்ச்சிகளை உருவாக்கியது. மெதுவாய் மாதுளைக் கொப்பை வளைக்கிறான். முற்கள் அவன் கைகளைப் பதம் பார்க்க., ஓ., முட்களின்ர விருப்போடதான் குருவிச்சை வளருதோ., பரிவு தேவைதான்.. ஆனால் உன்ர அடையாளத்தையே மறைக்கிறதுக்குப் பரிவு காட்டினால் உன்ர வேர் கூட மிஞ்சாது" அவனுக்குள் அவனே சொல்லிக் கொள்ள.,அவன் கையில் ஓடிய இரத்தத்தை மறு'கை துடைக்கிறது. அசையாத அவன் விழி குருவிச்சை மரத்தையே வெறித்துப் பார்க்கிறது. அருகே கிடந்த வருச்சுத்தடியை எடுக்கிறான்., அதன் நுனிப்பகுதியில் கட்டப்பட்டிருக்கிற கூர்மையான கத்தி பளபளக்கிறது.. நேராய் குருவிச்சையை நோக்கி ஒரே இழுவை., இரத்தம் சிந்தாது., மாதுளங் கொப்புடன் சேர்ந்தே மண்ணில் விழுகிறது.. விழுந்தும் வாடாத அதன் செழுமையை அவன் உற்று நோக்குகிறான்.. ''பிறரையே உறிஞ்சி வாழும் உன்னால் இனி எழ முடியாது. எழுகின்ற சூரியன் உன்னை சுட்டெரிக்கும்..



# ஏழ்மை...



"என்னப்பா முகம் கழுவவென வந்திட்டு., உங்களுக்குள்ளேயே ஏதோ கதைத்துக் கொண்டிருக்கிறியள்.?. திடுக்கிட்டவாறே திரும்புகிறான் முகுந்தன்.

சேலையை இடுப்பில் சொருகியவாறே அவனின் மனைவி புவனா:

"இல்லையப்பா., இந்த அழகான மாதுளை., அதன் செழிப்பு., இந்தக் குருவிச்சை மரம் இந்த மூன்றும் என்ர அரை மணி நேரத்தைச் சாப்பிட்டுட்டுதுகள்.

அவன் விழிகளுக்குள் ஆயிரம் கவிதைகள் ஓடுவதை அவள் பார்க்கிறாள்.. அவன் உதடுகளில் ஆயிரம் கவிதைகள் புன்னகைப்பதை அவள் பார்த்திருக்கிறாள்.. அவன் அவளுக்கு ஒரு கவிதைதான். இருந்தும் வறுமை இப்பொழுதெல்லாம் அவள் நாக்கைப் புரட்டியே உச்சரிக்க வைக்கிறது.

"அப்பா! உங்கட கற்பனையில ஏதோ நித்தம் நித்தம் பிறந்து இறந்து போகுதுகள்.. என்ன செய்யிறது.. பொருத்தமான வாழ்க்கையைத் தேடிக் கொள்கிறதவிட பொருந்துகிறதோட வாழ்கிறது தான் இப்ப எங்களுக்கு நல்லது.

"இல்லை புவனா.. இல்லை.. வறுமை உன்னைப் பொய் சொல்ல வைக்கிறது. பொருத்தமான வாழ்க்கையைத் தேடிக் கொண்டால் தான் மனசுக்கும் உடலுக்கும் வாழ்க்கை.. பொருந்துகிறதோட சேர்ந்து வாழுகிறது உடலுக்கு மட்டும் தான்.

"என்னப்பா செய்யிறது.. எங்கட இந்த நிலைமையில கற்பனை சோறு போடாது"

" இல்ல புவனா இல்லை. கற்பனைக்கும் வறுமைக்கும் தொடர்பே இல்லை..

கற்பனை பச்சை நிறமெண்டா வறுமை சிவப்பு நிறம். கற்பனை பிரபஞ்சங்களைக் கடந்தது. எல்லை இல்லாதது., முள்ளுக் கம்பிக்குள் அடங்காதது. ஆயிரம் கேள்விகளுக்கூடாக பிறப்பெடுப்பது தான் கற்பனை... அது வெளிச்சத்தைத் தரும்.. வறுமை அப்படியல்ல புவனா, வறுமைக்கு எல்லை இருக்கு.. அது வாழ்க்கை எனும் பயிரை யாரோ ஒருவன் சாப்பிடுவதற்காக பாதுகாக்கும் முள்ளுக்கம்பி விடைகளை கேள்வியாக்குவதுதான் வறுமை.. வறுமை எனும் தீ வாழ்க்கையைச் சுட்டெரிக்கும்.

"அவன் விழிகளுக்கூடாகவா இத்தனை உணர்ச்சிகளும்..'' புவனா மெலிதாய் புன்னகைக்கிறாள். அந்தப் புன்னகை ஆயிரம் அர்த்தங்களைச் சொல்கிறது. மகிழ்ச்சியா..? சோகமா..? பரிவா...? இயலாமையா...? இல்லை எல்லாமே கலந்திருக்கின்றனவா..?"அப்பா! உங்களோட கதைக்க ஏலாது உங்களுக்குப் பொருத்தமான வாழ்க்கை நிச்சயமாகக் கிடைக்கும்.,

புவனாவின் கைகளைப்பற்றுகிறான் முகுந்தன். "புவனா என்ர கற்பனை ஆற்றல் ஒருநாள் படைப்புக்களாக வெளிவரும்... சமூகத்தில் வெட்டி விட வேண்டியதை வெட்டி விடும், அணைக்க வேண்டியதை அணைக்கும். என்ர முதல் கவிதையிலேயே நான் கவிஞனாகிப் போனேன். எத்தனை பாராட்டுக்கள், எத்தனை விமர்சனங்கள் அந்தக் கவிதை தானே உன்னை என்னோடு சேர்த்தது. அந்தக் கவிதை தானே என்ர வாழ்க்கைப் பாதையை மாத்தியது. இப்போ எத்தனை எத்தனை கவிதைகள் ஊமையாகிப் போகுதுகள், இந்த வறுமை ஏன்.? ஏன் என்னைக் கொல்லுது..? தின்னுது..? இந்த வறுமையை நான் எப்படியும் உடைச்சு இந்த வானில் பறந்து வான் முகிலில் ஒரு நாள் கவிதை எழுதுவன் அது மழையாய் உலகெல்லாம் பொழியும்.. என் கற்பனை ஒரு பிடி சோற்றுக்காக அல்ல புவனா எங்களை.. எங்கள் வாழ்க்கை நெறியை.. ஏன் இந்த உலகின் இயக்கத்தையே இயக்க ☞

வேண்டும்.
அவன் வார்த்தைகள் அடுக்கடுக்காய் வேகமாய் வெளி வந்து விக்கித்து நிற்பதுபோல் உதடுகள் மேலுங்கீழுமாக ஏறி இறங்க அவன் கைகள் தளர்கிறது.
''அப்பா எங்கட வறுமையை இல்லாதொழிக்க முதல்ல நீங்க முயற்சி எடுங்கோ இந்த முயற்சியில நீங்கள் வெற்றி பெறக்க உங்கட இலக்கில நீங்க வெற்றி பெறுவீங்க.

புவனா கூறிக்கொண்டிருக்க முகுந்தன் கமுகு மரத்தில் சார்த்தி நிற்கும் தன் சைக்கிளைப் பார்க்கிறான். வயது போன அந்தச் சைக்கிலும் இயங்கச்சக்தி இன்றியும் இயங்கத் தயாராக அவனைப் போலவே...

***

டேய் தம்பியா முகுந்தன்: வேலைக்கு வந்ததே அரை மணித்தியாலம் பிந்தி சாப்பிடுறதுக்கு வேற ஒரு மணித்தியாலம் போக்காட்டிக் கொண்டிருக்கிறாய்... கெதியாய் சாப்பிட்டுட்டு வேலைக்குப் போ... தொப்பை வயிற்றில் நரைத்த முடி அழகாக உட்காந்திருக்க வழுக்கைத் தலையை ஒரு தலைப்பாகை மறைத்திருக்க... ''நான் உண்மையைச் சொன்னால் உன்ர கதை அவுட்'' என்று சொல்வது போல் காதுகள் இரண்டும் நிமிர்ந்து நிற்க அதில் ஒரு பேனா படுத்திருக்க பெரிய மூக்கிருந்தும் மூச்சு மிகவும் சிரமப்பட்டே வந்துபோக ஒரு கையால் நாரியை வளையாமல் பிடித்துக் கொண்டு முகுந்தனின் முன்னால் முதலாளி முருகேசு நின்ற போது தான் அவன் மதிய உணவின் ஞாபகத்துடன் சுய நினைவுக்கு வந்தான்.
"இல்ல முதலாளி உங்கட தொப்பை வயிறு., மொட்டத்தலை., தலைப்பாகை நாரியைப் பிடித்திருக்கும் கை., சொல்லும் செய்தி என்ன..? என சிந்திச்சேன் எனச் சொல்ல எடுத்தவன் திறந்த வாய்க்குள் சோற்றைத் திணிக்கிறான்.
வெள....வெள.... வெள....
"அட உனக்கும் பிளாஸ்ரிக் பிளேட்தானா? குரைக்காத உனக்கும் போட்டியா? நான் இங்க வரமாட்டேன். அது சரி எப்பவும் வாலை மட்டும் ஆட்டிக் கொள்ளு அப்பதான் நீ நன்றியுள்ள நாய் ஆவாய். அல்லது வெறும் நாய் தான்'' என்று சொல்ல மீண்டும் வாய் எடுக்க தும்மல் வந்து கெடுக்க இரண்டு சோறுகள் மூக்கின் துவாரத்தின் ஊடே வெளியே வந்து விழ'' அட எனர இரண்டு பிள்ளைகளும் என்னை நினைக்கினம் போல... பக்கத்து வீட்டுப் பவளம் அன்ரி கடன் வேண்டிய அரிசியைத் திருப்பிக் கொடுக்கவில்லையோ.. அல்லது முருங்கைக் கீரை மட்டும் தான் கறியோ.. முகுந்தனின் நினைவுகள் வீட்டை நோக்கித் திரும்ப.... "உஞ்சு... உஞ்சு...இந்தா சாப்பிடு" முருகேசு முதலாளியின் பேத்தி தன் செல்ல நாய்க்குட்டிக்குச் சாப்பாடு வைத்தபோது தான் முகுந்தன் தன் நிலை உணர்ந்தவனாய் காய்ந்த கைகளைக் கழுவத் தொடங்கினான்.

"தம்பி முகுந்தன் உன்ர கடைசியை என்னோட கொண்டு வந்துவிடன். அவளுக்கும் பொழுது போக்காச்சு.. உனக்கும் சுமை குறையுது, எனக்கும் கூடமாடாய் ஏதாவது உதவி செய்து கொண்டிருப்பாள்.. என்ன யோசிக்கிறாய் படிப்பே.. அது பிரச்சினையில்ல நேரம் கிடைக்கிற நேரங்களில அதை நான் சொல்லிக் கொடுப்பன்.. ''கால்களை மடக்கியிருக்க ஏலாது போல கால்களை அகலப்பரப்பி சுவருக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் முருகேசு முதலாளியின் மனைவி முகுந்தனுக்கு தூண்டில் போடுகிறாள்.
''அப்பா இண்டைக்கு நேரத்திற்கு வந்திடுங்கோ.. நானும் தம்பியும் உங்கட முதுகில ஏறி உம்பா விளையாட வேணும்., அதோட அம்மா எங்களுக்குப் பாடம் சொல்லித் தர வேணாம்.. நீங்கள்தான் வந்து சொல்லியும் தர வேணும்..'' காலையில் வேலைக்குப் புறப்படும்போது வழி அனுப்பி வைத்த முகுந்தனின் ஒரே மகள் அவன் இதயத்தில் விழிக்கிறாள்... மெல்லிய புன்னகை அவன் முகம் முழுக்க தவழ்கிறது. கண்களிலிருந்து கண்ணீ விழும் முன்னமே துடைத்துக் கொள்கிறான். பெரும் மூச்சொன்று நடுங்கியவாறு மெதுவாய் செல்கிறது. அவன் இதயத்தில் தூண்டில் ஊசியால் கொழுவி இழுப்பதாய் வேதனை... ஒரு கால் மட்டும் நிலத்தில் ஏதோ தாளம் போடுகிறது. வேகமாய்ச் செல்லும் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று முட்டிப் போகின்றன. எங்கையோ தொலைவில் மின்னல் ஒன்று வெட்டிச் செல்கிறது. நீல மேகங்கள் நிறமாறி கருமேகங்களாகிறது. கருக்கலைச் சுமந்த



மேகங்களின் அழகிய பின்னணியில் வெள்ளைக்... கொக்குகள் கைகளுக்கெட்டாத தொலைவில் தொலைந்து போகாத வாழ்க்கையுடன் சிறகு விரித்து எங்கோ பறந்து செல்கின்றது.

"என்ர பிள்ளை எனக்குச் சுமையா? அந்தப் பிஞ்சுக்கைகளுக்கு பழுத்த மிளகாய்ப் பழமா? ஐயோ! கற்பனை இவ்வளவு துயரத்தையும் தருமா?

"என்னடா முகுந்தன் என்னத்தைக் கேட்டிட்டன் எண்டு இப்படி யோசிக்கிறாய்... ஊர் உலகத்தில நடக்காததையே கேட்டிட்டன். இப்ப சொல்லாட்டியும் நாளைக்கு உன்ர மனிசியிட்டயும் கேட்டுவிட்டு வந்து பதில் சொல்லு...

"என்ர பிள்ளையின்ர காதில தோடு இருக்கோ இல்லையோ..., கழுத்தில சங்கிலி இருக்கோ இல்லையோ..., காலில கொலுசு இருக்கோ இல்லையோ...? அவளின்ர கழுத்தில 'தெலஸ்கோப்பை' தொங்க விடுவன்'' அன்று புவனாவுக்கு கூறிய... அந்த வார்த்தைகள் அவன் காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலிப்பதை உணருகிறான்.

——— சி. மாதுளா

மழை தூறத் தொடங்குகிறது முகுந்தன் வீட்டின் தாவரத்தினுள் ஓடுகிறான்... "தம்பி உந்த மிளகாய்ப் பழச்சாக்கை தூக்கி வீட்டுக்குள் போடு அப்பு'' ஓடுகிறான்... அவன் கூடவே மிளகாய்ப்பழமும் நனைகிறது.

"என்ன நனைஞ்சு போச்சுதே.......... சரிசரி.....அதைப் பரவிப்போட்டுவிடு. அவன் தலையில் இருந்துவடிகின்ற தண்ணீர் கண்ணீராய் தெரிகிறது.
"அம்மா நான் இல்லாட்டி இதை எப்படித் தூக்கியிருப்பீங்கள் நக்கலாய்க் கேட்டான் முகுந்தன்.
''அதுதான் உதவிக்கு ஒரு ஆளைக்கேக்கிறன் ...இப்பபையாவது விளங்குதே...''
அவன் கண்களால் எதையோ தேடுகிறான் .... இருக்கிறான்.... குனிகிறான்..எதையோ மணலில் அழுத்தமாய் எழுதுகிறான்.

கண்ணீர் கண்ணுக்குச் சொந்தமில்லை,
கண்ணுக்குஇமைகள் சொந்த மில்லை,
தண்ணீர் மண்ணுக்குச் சொந்த மில்லை, மண்ணுக்குப் பயிர்கள் சொந்தமில்லை,
வானம் கடலுக்குச் சொந்தமில்லை,
கடலும் மீனுக்குச் சொந்தமில்லை,
காற்று உயிருக்குச் சொந்த மில்லை-இருந்தும்
தாய் எனத் தனை உவந்து
சொந்தமாகி வாழ்கிறதே.
மனிதன் மண்ணுக்கு.......

ஓடிவந்த மழைநீர் எழுதியதைக் கரைத்து ஓடுகிறது. தொடர்ந்து எழுதுகிறான்....... மழை நீர் விடவே இல்லை. ''நான் எழுதியதைக் கரைத்தோடலாம்..... என்னை யாராலும் கரைக்க முடியாது.''

முகுந்தன் வானத்தை அண்ணாந்து பார்க்கிறான்....வானம் வெளிக்கத் தொடங்கிற்று."என்ன முகுந்தன் நீ கட்டிய மிளகாய் பாத்திகளையும் மழை கொண்டு போயிருக்கும். இனி வேலைக்கு மண்ணும் சரிப்பட்டு வராது. வேலை இன்றைக்கு அரை நேரத்தோட காணும். நாளைக்கு மழையைப் பார்த்திட்டு இல்லாட்டி நாளை இன்றைக்குவா.இந்தா ஐம்பது ரூபா வைச்சுக் கொள்". காசை முகுந்தன் கைகளுக்குள் திணித்த முருகேசர் பதிலை எதிர் பாராமலேயே தன் கடைக்குள் புகுந்து கொள்கிறார். ஆயிரம் கைகள் மாறி மாறி சாகும் நிலையில் இருக்கும் அந்த ஐம்பது ரூபாய்த்தாளை தன் கைகளுக்குள் வைத்து இறுக்கிக் கொள்கிறான் முகுந்தன். அவனின் கால்கள் முருகேசுவின் கடையை நோக்கி நகருகின்றன.
" அரிசி இல்லாட்டியும் பிள்ளைக்கு பால்மா... சீனி விலை கூடவாக இருந்தால் சர்க்கரை'' வ[illegible]னுப்பி வைத்தபோது புவனா சொல்லி விட்டவை மழை விட்டும் வெட்டிக் கொண்டிருக்கும் மின்னலைப்போல அவனுள்
" முதலாளி அங்கர் என்ன விலை?''
" நூற்றி நாற்பது''
" அரிசி''
" முப்பத்திரண்டு''
" ஐம்பது ரூபாவினுள் இரண்டு நாள் வாழ்க்கையை எப்படித் திட்டமிடுவது? சிந்திக்கிறான் முகுந்தன்.
" முதலாளி ஐம்பது ரூபாவிற்கு கடனாகச் சாமான் தந்திட்டு வேலை செய்யக்க கழிச்சு விடுங்கோவன்'' "கடன் தந்திட்டு பிறகு உன்னை மாதிரி கூலி வேலைக்கு என்னையும் போகச் சொல்லிறியோ'' அன்றைய சம்பவம் அவன் நினைவுக்கு வரவே ''
"ஒன்றரைக் கிலோ அரிசி போடுங்கோ''
"நாற்பத்தெட்டு ரூபா தா''
"இந்தாங்கோ மிகுதி இரண்டு ரூபாவிற்கும் கருவாடு போடுங்கோ''
"அதுக்குத்தான் சொபின் பை'' அந்த ஐம்பது ரூபா பணமும் முருகேசு முதலாளியிடமே இருக்கப் பிரியப்பட்டது போல் ஓடிச் சென்று அவரின் மேசை இலாச்சிக்குள் பதுங்கிக் கொள்கிறது. முகுந்தன் கடையில் கிடந்த நேற்றைய பத்திரிகையை எடுத்து மேய்கிறான்.
"அவசரமாக சிறுநீரகம் தேவை உடன் தொடர்பு கொள்ளவும், தகுந்த பணம் வழங்கப்படும்''.
"அண்ண சிறுநீரகம் கொடுத்தா என்ன, என்ன பாதிப்பு ஏற்படும்..?'' கடையில் இருந்து பொழுது கழிப்பதையே வேலையாகக் கொண்ட ஒருவரிடம் முகுந்தன் கேட்கிறான். "அது தெரிஞ்சா நான் ஆஸ்பத்திரியில் எல்லோ இப்ப இருப்பன்''
"முதலாளி இந்தப் பேப்பரை கொண்டு போகட்டே" சரி கொண்டு போய்த் தொலை'' கடையின் படிகளில் இருந்து மெதுவாய் இறங்கி வெளியேறுகிறான் முகுந்தன். அந்தப் பழைய சைக்கிள் காற்றுப் போய் நிற்கிறது. "ஒட்டுவதற்குப் பணம்'' ஒரு நப்பாசையில் அவன் கை பொக்கற்றுக்குள் நுழைகிறது. "இனி என்ன நடக்க வேண்டியதுதான்.'' அவன் மூளை அவனுக்குச் சொல்கிறது. "தனிய என்றால் வேகமாக நடக்கலாம். இந்தச் சைக்கிளையும்கொண்டு.'' அவன் தனக்குள் அலுத்துக்கொள்கிறான்- நடக்கிறான்... நடக்கிறான் "இன்று அமாவாசை இரவு நல்ல இருட்டு'' ஒரு பெருமூச்சின் பின் அவன் மனம் சொல்கிறது. அந்த அமாவாசை இருட்டில் ஒரு மின்னல். அவன் கண்களை சில கணம் குருடாக்கிறது- கண்களில் வடியும் கண்ணீரை அந்த இரவிலும் அவன் கை துடைக்கிறது.

## கவலை பற்றிய இரண்டு கவிதைகள்



கருணை ரவி

### கவலை 01

எவ்வளவு நாட்கள்
காத்திருந்தோம்
இந்தக்காற்றுக்கு....
உடல்வியர்த்தொழுகி குழந்தை
அலற
ஒரு விசிறி செய்வதற்கு
உடலிகளைத்தேடி
எவ்வளவு இடங்கள்
அலைந்தோம்.......?
சூடுகளை அடித்துவிட்டு
பதர்களைப் போக்குவதற்கு
எத்தனை தடவைகள்
குல்லங்களில் நெற்களை
கோலிவிட்டு
ஏமாந்திருப்போம்.....
எங்கேயோ நாற்றமெடுக்கும்
பிணத்தின் வெடுக்கை
மூக்கிலிருந்து தொலைக்க
முடியாது
எத்தனை தடவைகள்
மூச்சுத்திணறியிருப்போம்.......
இப்போ காற்று வீசுகிறது.......
நான் கவலை கொள்கின்றேன்:
காற்றில் புழுதிகள்
கலந்துவிடுமோ என!

### கவலை 02

காற்று
வீசியடிக்கின்றது....
காற்றின் விரல்கள்
மரங்களை
முறித்தெறிகின்றன.
உலாஞ்சித்தெறிக்கும்
ஓங்கி வளர்ந்த
பனைகளிலிருந்து
காவோலைகள்
உரித்தெறியப்படுகின்றன
பசியில் துடித்த குஞ்சுகள்
ரெண்டு
வட்டுக்குள்ளிருந்து
அலறுகின்றன.....
காற்றை எதிர்த்து
இறக்கைகளை அடிக்க
முடியாது
இலந்தை முட்களில் விழுந்து
தவித்தலறுகின்றது
குருவியொன்று.
நீயோ கற்களை எறிந்தபடி
இருக்கின்றாய்
அதன் கால்களை
உடைப்பதற்காய்.
நானோ கவலை
கொள்கின்றேன்;
குருவியின் அலகினுள்
இருக்கும்
இரைகளுக்காய்
தவித்துக்கொண்டிருக்கும்
அந்தக் குஞ்சுகள் பற்றி

***

## இதுவும் பட்டிதான்...



யாழ். வி. சுதா.

சவுக்காலைச் சந்தியில்
ஒரு கூட்டம் களங்கட்டி
பாஞ்சது பாக்கியநாதனா
பக்கத்தில் இருக்கும்
றப்பியேல் அண்ணையா
கனநாளாய் நானுமில்ல
கடலரிப்பு நல்லாத்தான்
குடிமனைக்கு ஏறிப்போச்சு
வருகிற மாரிக்கு
ஓராக்குப் பிழையில்ல
இதக்குள்ள பாடுபாத்து
ரெண்டுகூட்டம்பாயவேணும்
இப்படி நினைச்சுக்கொண்டு
கிட்டவாகப் போய்ப்பார்த்தா
பட்டிக்குள் நிண்டவர்
கடிப்புவல இல்லாம
கையில வேற ஏதோ
பட்டியெண்டு நான் பாத்தது
பச்சப் பொய் இதுவும் பட்டிதான்
ஆள்பிடிபட்டி.

***

உன் ஆடை அழகாக இருக்க வேண்டும்; ஆடம்பரமாய் இருக்கலாகாது. - ஜான் லிலி




## சிறுவர் கதை

# இடியாய் வந்த பதில்

மகாராஜா என்பவர் ஊரில் பெரிய பணக்காரர். மகாராஜாவுக்கு பெரிய மாடிவீடும் ஏக்கர் கணக்கில் வயல்காணிகளும், ஐம்பது பட்டிமாடுகளும் இருக்கின்றன. வீட்டில் வைத்திருக்கும் வேலை ஆட்களுக்கும் மகாராஜா வேலைக்கேற்ற சம்பளம் கொடுக்கமாட்டார். வேலையாட்கள் அனைவரும் சம்பளம் போதாமையினால் வேலையை விட்டு நின்றுவிட்டார்கள்.

வீட்டில் பணமும் பொருட்களும் அதிகமிருப்பதால் மகாராஜாவுக்கு சரியான பயம். நாய்கள் குரைத்துக் கேட்டால் இரவில் நித்திரைகொள்ள மாட்டார்.

மகாராஜா,வீட்டுக்கு ஒரு பலசாலியான ஆள் என்றால் அவனே வேலைகள் அனைத்தையும் செய்வான். திருடர்கள் வந்தால் சண்டையும் செய்வான். தனக்குப் பயமிருக்காது என்பதை நினைத்து தெருவில் நடந்து சென்றார். அப்போது ஒரு பலமான மனிதன் வந்து கொண்டிருந்தான். தலையில் மயிர்கள் எதுவுமில்லை. பெரியமீசை. மகாராஜாவுக்கு அவனை நன்றாகப் பிடித்து விட்டது.

அவனுக்குப் பெயர் பெரியசாமி மகாராஜா பெரியசாமியைப் பார்த்துச் சிரித்தார். பெரியசாமியும். சிரித்தான்.

"உனக்கு மூன்று நேரமும் சாப்பாடு தருகிறேன். வீட்டில் வேலை செய்ய வருகிறாயா....? வீட்டில் குதிரை நிற்கிறது. குதிரையிலே நீ கடைத்தெருவுக்குப் போகலாம்'' என்றார் மகாராஜா.

பெரியசாமி உடனே ஓம் என்று சொன்னான். பெரிய சாமிக்கு உறவுகள் ஏதுமில்லை. கடைகளில் மூடைகள் தூக்கிக் கொடுத்தால் தான் சாப்பாடு கொடுப்பார்கள். இந்தவேலை பெரியசாமிக்கு மிகவும் பிடித்தது.



மகாராஜா தான் ஒரு முட்டாளைப் பிடித்துவிட்டேன். சம்பளம் எதுவும் கேட்காமலே சாப்பாட்டுக்கு மட்டும் ஓம் என்று சொல்லிவிட்டான் என்பதனை நினைத்து சந்தோசத்துடன் வீட்டுக்குச் சென்றார்.

பெரிய மாடிவீட்டையும் குதிரையையும் பார்த்ததும் பெரியசாமிக்கு ஆசையாக இருந்தது.

"என்னவேலை ஐயா நான் செய்யிறது?'' பெரியசாமி சிரித்தபடி கேட்டான்.

"நான் சொல்லும் வேலையை உடனுக்குடன் செய்து முடிப்பதுதான் உனது வேலை. அணில்வெட்டிய சாக்குகளை உடனே தைக்க வேணும். குளிக்க தொட்டியில் நீர் நிரப்ப வேணும்" என்றார் மகாராஜா. உடனே அவர் சொன்ன வேலைகளை பெரியசாமி செய்து முடித்தான். அனைத்தையும் செய்து முடித்த பெரியசாமி மேல் அதிக விருப்பம் கொண்டார் மகாராஜா.

"இனி என்ன வேலை ஐயா செய்யிறது?" என்று களைக்காமல், சோர்ந்து இருக்காமல் பெரியசாமி கேட்டான்.

"அரிசி இருக்கிறது. நெத்தலிக் கருவாடு இருக்கிறது. உடனே சமையும்" என்றார். உடனே பெரியசாமி சமைப்பதற்குச் சென்றான்.

மகாராஜா குளித்துவிட்டு வந்தார் அவருக்கு நல்ல பசி. சாப்பாட்டு மேசையில் வந்து இருந்துவிட்டு பெரிய சாமியைக் கூப்பிட்டார். பெரியசாமி ஓடி வந்தான்.

''கோப்பையையும் தண்ணியையும் கொண்டுவந்து வைத்துவிட்டு, சாப்பாட்டை எடுத்துக் கொண்டுவா' என்றார். உடனே பெரியசாமி தண்ணியையும் கோப்பையையும் அவருக்கு முன்னால் வைத்துவிட்டு, கைகளைக் கட்டிக்கொண்டு சிரித்தபடி நின்றான்.

"ஏன் நிக்கிறீர்- பசிக்கிறது சாப்பாட்டைக் கொண்டு வா'' என்றார் மகாராஜா.

"சாப்பாடு ஒன்றுமில்லை ஐயா. சொல்லுற வேலைகள் எல்லாவற்றையும் உடனே செய்துமுடிக்கவேணும் என்று நீங்கள் சொன்னீர்கள்தான். நான் சமைத்தது எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்துவிட்டேன்''. என்றான் பெரியசாமி. மகாராஜாவுக்கு தலையில் இடிவிழுந்தது மாதிரி இருந்தது.

-பிரஷகி-

# வாரம் ஒரு குறள் அறிவோம்



நண்பர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் எல்லோரும் நண்பர்களாக இருந்து விடுவதில்லை. நண்பர்களிடத்திலே கூட எடுக்கக் கூடியவற்றை எடுத்துக்கொள்ள முயலும் நண்பர்களே இந்த உலகத்தில் நிறையப் பேர் இருக்கிறார்கள். இவர்களை நண்பர்கள் என்று சொல்லலாமா? இதனால்தான் வள்ளுவன் அழகாகச் சொன்னான் ஒருவருடைய ஆடையானது கழன்று விழும்போது அவருடைய கைகள் எப்படி ஓடிச்சென்று அதைப் பற்றிக் கொள்கின்றதோ அதேபோல நண்பர்களுக்குத் துன்பம்ஏற்படும் போது ஓடிச்சென்று மனம்நிறைந்து உதவிசெய்ய வேண்டும் என்பதே அவரின் அழகான கருத்தாகும். குறள் இதோ-

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

# ரதனும் சுதனும்




ரதன்: RDX வெடி மருந்து என்றால் என்ன? அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் எவை?

சுதன்: Research & Development Explosive என்ற சொற்றொடரின் சுருக்கம்தான் RDX என்பது. இது சைக்ளோட்ரை இதை லீன் ட்ரைநைரமன் என்ற கரிம வேதிப் பொருளாகும். இதை சைக்ளோ நைட் என்றும் கூறுவர்.

இதில் கரிமம், ஹைடிரஜன் எரிபொருள்கள் இருக்கின்றன. எரிவதற்குத் தேவையான ஒக்ஸிசனை நைட்ரேட் தருகிறது.

RDX ஐ நல்லவழியில் பயன்படுத்தினால் குகை, சுரங்கம் முதலியவற்றை வெட்டலாம். அதிகம் சக்திவாய்ந்த இதனை தீய வழிக்குப் பயன்படுத்தினால் இழப்புதான் நேரிடும்.



# வானம் பார்

நீல வானை நிமிர்ந்து பார்
நீந்தும் வண்ண மேகம் பார்
காலையில் கதிரவன் தோன்றும் பார்
கணக்காய் மேற்கே மறையும்பார்
இரவில் உலவும்நிலவைப்பார்
எழிலாய் சிமிட்டும் விண்மீன் பார்
சரமாய் பொழியும் மழையைப்பார்
சத்தம்போடும் இடியைப்பார்
மின்னல் ஒளியின் கீற்றைப் பார்
மனதைக் கவரும் வானவில் பார்
இயற்கை பொழியும் அழகு எல்லாம்
இறைவன் அளித்த மாட்சியே

தெ.மோகனதாசன்
கிளி-புன்னைநீராவி வித்தியாலயம்

# வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானி

## 'காரோலஸ் லினஸ்'

''தமிழன் தாய் பெயரோ 'மம்மி' அவன் நாய் பெயரோ ஜிம்மி.........'' எண்டொரு பாட்டு இருக்குது ஞாபகமிருக்கா? அதுதானுங்கோ, குழந்தை ஒண்டு தன்ரை அம்மாவை 'மம்மி' எண்டு அரைகுறையாகக் கூப்பிட ,இன்னொண்டு 'மம்' எண்டு அசிங்கப்படுத்துமாம் தமிழை!


இப்பிடி எல்லாம் அசிங்கமும் அரைகுறையும் வராமல் இருக்கத்தானோ , என்னவோ தெரியேல்லை. உயிரினங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு 'பொதுப்பெயரை' சத்தியமா நான் வைக்கவில்லை. இந்த 'காரோலஸ் லினஸ்' எண்டவர்தான் வைச்சிருக்கிறாராம்..

அதென்ன அவர் தன்ரை இஷ்டத்துக்கு 'பெயர்' வைக்கிறது எண்டு என்னோடை சண்டைக்கு வந்திடாதையுங்கோ. சரிதானே.

இந்த 'லினஸ்' என்ன செய்தாரெண்டா, உயிரினங்கள் எல்லாத்துக்கும் 'பொதுத்தலைப்பு' ஒவ்வொண்டின் மூலம் வகைப் படுத்தினாராம். இப்பிடி வகைப் படுத்தி, அதை 'Systema naturae' எண்ட பெயரிலை புத்தகமா வெளியிட்டாராம்.

இவருக்கு சின்ன வயசிலஇருந்தே பறவைகள், தாவரங்கள் வரைஞ்சு அதுகளுக்கு 'பெயர்' வைக்கிற தெண்டா அப்பிடியொரு சந்தோசமாம். சிலவேளைகளிலை பூச்சிகள் பலவற்றை பிடித்து, அதுகளை வகைப்படுத்தி தனக்குத்தானே அதுகளுக்கு பெயர்வைச்சு விளையாடினாராம்.

சரியான 'அப்பம்' எண்டு நினைப்பியள் என்ன! ஆனா அப்பிடியான 'அப்பம்' தான் இண்டைக்கு உலகமே அறிஞ்ச ஒரு விஞ்ஞானியாக இருக்கிறாரெண்டா அது அவருக்கு மட்டுமில்லை அவர் பிறந்த மண்ணுக்கே பெருமை தானே.




'அதென்ன அவர்தான் அப்பிடியோ? நானும்தான் எங்கடை மண்ணுக்கும், மக்களுக்கும் பெருமையைத் தேடித் தருவன்' எண்டு நீங்கள் ஒவ்வொருவரும் நினைச்சா, நாடு கொஞ்சமாவது உருப்படும் என்ன?


அதுசரி, இவ்வளவையும் வாசிச்சுப்போட்டு, எங்கை எழும்பி ஓடுறியள், மெல்லமாய் போங்கோ, 'அவசரக்காரனுக்கு புத்தி மட்டு' எண்டு சொல்லுறவை.

-கல்யாணி-


# செய்து பாருங்கள்




இருவேறு நிறப்பேப்பர்களை படத்தில் உள்ளவாறு சுருட்டுங்கள்.





நிலைக்குத்தாக படத்தில் உள்ளவாறு சுருளை வெட்டுங்கள்.




இலை வடிவத்திற்கு மிகுதியை வெட்டுங்கள்.




ஒத்த நிற இலைகளை மடிக்கவும். ஏனைய நிற இலைகளை வட்ட வடிவமாக வெட்டவும்.




வட்டவடிவ இலைகளை சுருட்டி, அமத்தி விடவும்.




சுருளின் உச்சியை மெதுவாக இழுக்கவும்.




சுருளின் உச்சியை அமத்தவும், றோசாப்பூ வெளித் தோன்றும்.

# அறிந்து கொள்ள சில விடயங்கள்



(01) மாலைதீவின் தலைநகரம் எது?
மாலே

(02) மாலை தீவில் எத்தனைதீவுகள் உள்ளன?
1000 தீவுகள்

(03) உலகில் உள்ள நாடுகள் எத்தனை?
233

(04) உலகில் அதிகளவு இராணுவத்தைக் கொண்ட நாடு எது?
சீனா

(05) ஸ்ரேலின் பிரதமர் யார்?
ஏரியல் ஷெரோன்

(06) வீதியில்லாத நகரம் எது?
வெனிஸ்

(07) உலகில் மிகப்பெரிய சந்தை எங்குள்ளது?
இங்கிலாந்தில்

(08) அதிகளவு தங்கம் உள்ள நாடு எது?
பப்பூவா நீயூகினியா

ச. சங்கீத்தா ஆண்டு-11, மு-வள்ளிபுனம் கனிஷ்டவித்தியாலயம்



# ஓயாத அலைகள் -01

வரவு - பன்னிரெண்டு

ராகவன் எழுதுகிறார்




## வாசகர்களுக்கு

**ஓயாத அலைகள் சித்திரக்கதைத் தொடர், தொடர்பான உங்களின் அபிப்பிராயங்களை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தவறாது எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.**



# குதூகலம்



## அமெரிக்க அதிபரின் மனைவி

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்டை ஒருநாள் நண்பர் ஒருவர் பார்க்க வந்தார். இருவரும் சில நிமிடங்கள் வரை ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். இறுதியில் அந்த நண்பர் விடை பெற்றுக்கொள்ளும் போது, "எங்கே உங்கள் மனைவியை காணோம்: வந்ததும் அவரிடம் நான் அவரை நிரம்ப கேட்டதாகக் கூறுங்கள்" என்றார்.

" நல்லவேளையாய் போயிற்று. நான் அவளைப் பார்த்தே எத்தனையோ நாட்கள் ஆகின்றன. தயவு செய்து அவளை தாங்கள் எங்கேயேனும் கண்டால் நான் நிரம்பக் கேட்டதாக கூறுங்கள் என்றார் ரூஸ்வெட்ல்.

★★

## நன்றாக காது கேட்கிறது

ஸ்விடன் மன்னர் கஸ்டா ஒருமுறை தம்முடைய கிராம விடுதியில் தங்கியிருந்த போது உலவுவதற்காக வெளியே கிளம்பினார். அவரை வழியில் இரு இளம் பெண்கள் கடந்து சென்றார்கள். அவர்களுள் ஒருத்தி, " பார்த்தியா அவரை, கிழவராகத் தான் இருக்கிறார்" என்றாள்.

உடனே இன்னொருத்தி " ஆமாம் முகத்தில் கூட சுறுக்கங்கள் விழுந்து விட்டன" என்றாள். அவர்களை மன்னர் திரும்பிப் பார்த்து , "ஆனால் அவருக்கு காது நன்றாகக் கேட்கிறது" என்று கத்தினார்.

★★

## பிறந்தநாள் வாழ்த்து

ஆங்கில நாவலாசிரியர் மார்க்ட்வைனின் ரசிகர்கள் இருவர் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்து அனுப்ப விரும்பினார்கள். ஆனால் அவருடைய முகவரி தெரியாது. என்ன செய்தார்கள் என்றால்? அவரது பிறந்தநாள் வாழ்த்தில் மார்க்ட்வைன் எங்கே இருக்கிறார் என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்" என்று எழுதி போஸ் பண்ணிவிட்டார்கள். சில நாட்களின் பின் பதில் வந்தது.

"ஆண்டவனுக்கு தெரிந்திருந்தது"

★★

## பிரார்த்தனையில்....

தாயும் மகனும் பிரார்த்தனை செய்துகொண்டிந்தனர். பிரார்த்தனையின் போது கண்களை திறக்கக் கூடாது என எத்தனை தடவை உனக்கு சொல்வது என்று கேட்டாள் தாய். மகன் கேட்டான் நான் கண்களை அடிக்கடி திறக்கின்றேன் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது.

★★

## ஸ்காட்டின் நினைவாற்றல்

ஆங்கில மொழியில் அழியாப்பல நவீனங்களை எழுதிப்புகழ் பெற்றவர் ஸர் வால்ட் ஸ்காட். அவர் கதை எழுவதில் மட்டும்வல்லவர் அல்லர். கவிதை எழுதுவதிலும் அப்படித்தான்.

ஒருநாள் அவர் ஒரு கவிதையை நண்பர் ஒருவருக்குப் படித்துக்காட்டி அதனை வெகுவாகப் புகழ்ந்தார். அதன் நடையழகையும் பொருட்செறிவையும் எடுத்து விளக்கி , "பைரன் பிரபுவின் திறமையே திறமை " என்று அந்தக் கவிதையை எழுதிய பைரனை வாயாரப் பாராட்டினார். நண்பர் சென்ற பிறகுதான் அவருக்குத் தெரியவந்தது அந்தக் கவிதையை எழுதியவர் பைரவன் அல்லர், தாம் தான் என்பது.

★★

## 200 வயதா?

நடைபாதையில் மூலிகை வேர்களை வைத்து மருந்து விற்றுக் கொண்டிருந்தவர் கூறினார்.

"என்னைப் பாருங்கள் இந்த மூலிகை மருந்து சாப்பிட்டுத்தான் இப்பொழுது 200 வயதைத் தாண்டியிருக்கிறேன்."

கூட்டத்தில் இருந்தவருக்கு நம்பிக்கை இல்லாமல் அந்த மனிதனின் உதவியாளரிடம் கேட்டார் "உண்மையிலேயே இவருக்கு 200 வய்தா?" என்று.

'அந்த இளைஞன் "எனக்கு எப்படித் தெரியும்? 120 ஆண்டுகளாகத்தானே இவருடன் நான் வேலை செய்கிறேன்"

★★

## தந்திரமான புத்தி



"சுவரில் ஆணி அடிக்கும் போது நமது கட்டைவிரலில் சுத்தியல் அடித்து விடாமல் இருக்க சிறந்தவழி என்ன தெரியுமா?"

பக்கத்திலுள்ள வேறு யாரையாவது ஆணியை பிடித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அடிக்க

# அறிவித்தல்

## (கச்சேரி- முல்லைத்தீவு)

(வடகிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## மாவட்ட அலுவலகங்களுக்கு ஆட்சேர்ப்பு முல்லைத்தீவு மாவட்டம்.

வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தில் (NECORD) முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்திலுள்ள கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் A-4 அளவு கடதாசியில் தயாரித்து தமது சுயவிபரத்துடன் (Bio-data) 2002.10.08 ஆம் திகதியோ, அல்லது அதற்கு முன்போ கிடைக்கக் கூடியதாக ''அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு'' என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையில் ''NECORD முல்லைத்தீவு.................................... பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும். 2002.10.08 ஆம் திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

### அ) கணக்காளர் பதவி:-

**தகைமைகள்:**

அரசாங்க கணக்காளர் சேவையின் 1ஆம் வகுப்பைச் சேர்ந்த 10 வருட அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் அல்லது வெளிநாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயற்படும் திட்டங்களில் குறைந்த பட்சம் 5 வருட அனுபவமும், தொழில்சார் நிதி அல்லது முகாமைத்துவ கணக்கியல் துறையில் அங்கீகரிக்கப்பட்டதொழில்சார் நிறுவனத்தில் இணைந்து அங்கத்துவம் பெற்ற ஒருவர் அல்லது கீழ்க்கண்ட தகைமைகளில் ஒன்றை உடையவர்.

1. இலங்கையில் அல்லது இங்கிலாந்து பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரீட்சையில் சித்தி அல்லது உரிமத்தவர். (Licentiate)
2. இங்கிலாந்து பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) நிலைI, நிலைII இல் சித்தி.
3. இங்கிலாந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் நிலைI, நிலைII இல் சித்தி.
4. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி.
5. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி.
6. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி.
7. இங்கிலாந்து செயலாளர்களின் நிர்வாகிகளின் பட்டய நிறுவனத்தின் இறுதி பரீட்சையில் சித்தி.

**வயதெல்லை**

*60 வயதுக்கு குறைந்தவராக இருக்க வேண்டும்.*

**சம்பளம்**

*அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் உத்தியோகத்தரின் தகைமை, அனுபவம், ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சம்பளத்துடன் 50%க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.*

### ஆ) தரவு நிரற்படுத்துநர்:-

**தகைமைகள்:**

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றையுடையவராக இருத்தல் வேண்டும்.

i. மொழி, கணிதம் / தூயகணிதம் / ஆரம்பகணிதம், பௌதிகவியல் அல்லது விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தியுடன் 5 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*அல்லது*

ii. மொழி, கணிதம் / எண்கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 5 ''ஏ'' அல்லது ''பி'' தர திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தேசிய கல்விப் பொதுத்தராதர சான்றிதழ் பரீட்சையில் தோற்றி சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**இத்துடன் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் பின்வரும் பகுதிகளில் கணனிப்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.**

1. Windows Operating Systems.
2. Microsoft Word
3. Microsoft Excel
4. Microsoft Access

**வயதெல்லை**

*60 வயதுக்கு குறைந்தவராக இருக்கவேண்டும்.*

**சம்பளம்**

*அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் உத்தியோகத்தரின் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சம்பளத்துடன் 50%க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.*

### இ) எழுதுநர்:

**தகைமைகள்:**

கீழ்ககுறிப்பிட்டவற்றில் ஏதாவது ஒன்றையுடையவராயிருத்தல்.

I. எண்கணிதம்/ தூயகணிதம்/ ஆரம்பகணிதம்/ வர்த்தக எண்கணிதம், மொழி, இலக்கியம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 2க்கு மேற்படாத அமர்வில் தோற்றி 4 பாடங்கள் திறமைச்சித்தியுடன் சிரேஷ்ட தராதர பத்திர பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

*அல்லது*

II. எண்கணிதம்/ தூயகணிதம்/ ஆரம்பகணிதம் வர்த்தக எண்கணிதம், மொழி, இலக்கியம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 2க்கு மேற்படாத அமர்வில் தோற்றி பொதுத்தராதர பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*அல்லது*

III. மொழி, கணிதம் உட்பட குறைந்த பட்சம் 4A அல்லது B தரச்சித்திகளும் மற்றைய பாடங்களில் C க்கு குறையாத சித்திகளையும், தேசிய கல்விப் பொதுத்தராதர சான்றிதழ் பரீட்சையில் பெற்றுக் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

*60 வயதுக்கு குறைந்தவராக இருக்கவேண்டும்.*

**சம்பளம்**

*அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் உத்தியோகத்தரின் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சம்பளத்துடன் 50%க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.*

குறிப்பு:- **ஆங்கில அறிவு, கணனி அறிவு ஆகியவை விசேட தகைமைகளாக கணிக்கப்படும்.**

### ஈ) தட்டெழுத்தாளர் பதவி:

**தகைமைகள்:**

i. ஒரே அமர்வில் மொழி, இலக்கியம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கல்வி பொதுத்தராதர (சாதாரணதர) தேசிய பொதுக்கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

*அல்லது*

ii. ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்து அடுத்த அமர்வொன்றில் வேறுமொரு பாடத்தைப் பூர்த்தி செய்து மொழி, இலக்கியம் அடங்கலாக 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் பொ.க.சா.(சா.த) பரீட்சை அல்லது தேசியபொதுக்கல்விச் சான்றிதழ் (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**வயதெல்லை**

*60 வயதுக்கு குறைந்தவராக இருக்கவேண்டும்.*

**சம்பளம்**

*அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் உத்தியோகத்தரின் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சம்பளத்துடன் 50%க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.*

குறிப்பு:- **ஆங்கில அறிவு, கணனி அறிவு ஆகியவை விசேட தகமைகளாக கணிக்கப்படும்.**

### உ. சாரதி பதவி:-

**தகைமைகள்:**

i. 8ஆம் வகுப்பு ஆண்டு9 பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
ii. மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வாகனமோட்டுவதற்கு தகுதிவாய்ந்தவரென வழங்கிய சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
iii. மோட்டார் வாகனங்கள் ஓடி குறைந்தது 3 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
iv. 5' $2^1/_2$'' அங்குலத்திற்கு குறையாத உயரத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
v. சிறந்த கண்பார்வை, தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
vi. போக்குவரத்து விதிகளை நன்கு தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

*60 வயதுக்கு குறைந்தவராக இருக்கவேண்டும்.*

**சம்பளம்**

*அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் உத்தியோகத்தரின் தகைமை, அனுபவம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சம்பளத்துடன் 50%க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.*

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சையின் போது முல்லைத்தீவு மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட வீண்ணப்பதாரி கட்கு குறிப்பிட்ட தகைமையின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப் படும்.

கச்சேரி,
முல்லைத்தீவு.

(சி.7394)


திருமதி. இமெல்டா சுகுமார்
அரச அதிபர். முல்லைத்தீவு.

# சாதனையாளர்களும் சாதாரண பிறவிகளே

உலகில் தினம் சூரியன் உதிக்கிறது. மெல்ல மெல்ல மேலெழும்பி உச்சிக்குப்போய் மெல்ல மெல்ல சாய்ந்து மறைகிறது. 12 மணி நேரத்தைக் கால வெள்ளம் கண்முன்னே அடித்துக் கொண்டுபோய் விடுகிறது. இந்த 12 மணிப் பகல் பொழுதைக் கழிப்பதில்தான் ஒவ்வொரு நபரும் தங்களுக்கென்று தனி எண்ணம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் எல்லோருமே திறமையான சாதனையாளர்கள். இல்லை. ஒவ்வொரு துறையிலும் அவர்களை எண்ணிவிட முடியும் ஆனால் இந்த திறமையான சாதனையாளர்கள் பிறவியிலேயே அப்படிப் பிறந்துவிட்டவர்களா என்ன? கிடையாது. ஏனையோரைப் போலவே பிறந்து சாதனையாளர்களாக மாறுகிறார்கள். ஆனால் இந்த மாற்றம் அவர்களிடம் மட்டுமே நிகழ்வது ஏன்? அந்தமாற்றம் தானாக நிகழ்வதா அல்லது அந்த மாற்றத்தை இவர்கள் நிகழ வைக்கிறார்களா? நிச்சயமாக இவர்கள்தான் அதை நிகழ வைக்கிறார்கள். அப்படி நிகழ வைப்பதில்தான் திறமையான இவர்களது சாதனையின் ரகசியம் அடங்கியிருக்கிறது. தங்கள் செயல்திறனை உச்சக்கட்டத்திற்கு உயர்த்திக் கொள்ளும் உன்னத மர்மம் புரிந்திருக்கிறது அவர்களுக்கு!

1967ம் ஆண்டில் மனிதனைச் சந்திரனில் இறக்க முடிவு எடுக்கப்பட்டபோது அப்போலோ 11மிஷினின் லூனார் மாடுயூல் (lunar module) சந்திரனில் இறங்க வேண்டிய காலத்தைத் தயாரிக்கும் பணி க்ரம்மேன் ஏரோஸ் பேஸ் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்குழுவின் தலைமையில் ஆயிரக்கணக்கான சாதாரண ஆண்,பெண் வேலையாளர்கள்,ப்ராஜக்ட் மனேஜர்கள், காரியதரிசிகள்,தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர், திடீரென்று ஏதோமந்திர சக்தியால் இயக்கப்பட்டவர்கள் போல் பணி புரிய ஆரம்பித்தனர். சொல்லி வைத்தாற் போல அனைவரும் தங்கள் உச்சக்கட்ட செயல்திறனைப் பிரதிபலித்தார்கள். என்ன காரணம்?

**இந்த அற்புத சாதனையாளர்கள் ஒன்றும் அமானுஷ்யப் பிறவிகள் அல்ல. வெற்றிகாண மகா பிரமாதமான திறமையோ வெற்றியைப் பதிக்கப் பிரத்யோகமான சாகசத் திட்டங்களோ அவர்களிடம் இல்லை. ஆனால் ஒன்றே ஒன்று தங்களுக்குச் சாதகமாக இல்லாதவற்றை கூடத் தங்கள் எண்ணத்திற்கு ஏற்ப வளைத்து மாற்றிக்கொள்ளும் திறன் இருந்திருக்கிறது.**



''இந்த உலகமும் நிலவும் தோன்றிய காலத்திலிருந்தே நிலவில் காலடி எடுத்து வைக்க வேண்டும் என்று மனிதன் கனவு காண ஆரம்பித்து விட்டான். ஆனால் இத்தனை நூற்றாண்டு கள் வெறும் கனவாகவே இருந்து வந்த ஒன்றிற்கு வடிவம் கொடுக்கிறோம் அந்தக் கனவை நனவாக்கப் போகிறோம் நாங்கள்!" என்று அந்தத்திட்டத்தின் மனேஜர் அதற்குப் பதில் கூறியிருக்கிறார்.

ஒரு தனிமனிதன் கனவல்ல. மனித குலத்தின் கனவாய் இருந்து வந்த நிலவுப் பயணத்தை மெய்ப்படுத்த வேண்டும் என்ற தீவிர ஆவல் அந்தப் பணியாளர்களை ஒட்டு மொத்தமாய் உற்சாகப்படுத்தியிருக்கிறது. செயல்திறனின் உச்சத்திற்கு அவர்களை ஏவியிருக்கிறது.

ஏறத்தாழ 18 ஆண்டுகால ஆய்வில் தெரியவந்துள்ள உண்மை என்னவென்றால் இந்த அற்புத சாதனையாளர்கள் ஒன்றும் அமானுஷ்யப் பிறவிகள் அல்ல. வெற்றிகாண மகாபிரமாதமான திறமையோ வெற்றியைப் பதிக்கப் பிரத்யோகமான சாகசத் திட்டங்களோ அவர்களிடம் இல்லை. ஆனால் ஒன்றே ஒன்று தங்களுக்குச் சாதகமாக இல்லாதவற்றை கூடத் தங்கள் எண்ணத்திற்கு ஏற்ப வளைத்து மாற்றிக்கொள்ளும் திறன் இருந்திருக்கிறது.

உதாரணத்திற்கு டென்னிஸில் பீட் சாம்பிராஸ் உலகின் முதன்மை ஆட்டக்காரராய் மதிக்கப்படுகிறார். இப்படிப் பட்டவர்கள் பந்தயத்தின் முதல் சுற்றில் ஆடும்போதே தாங்கள் இறுதி ஆட்டத்தில் ஆடுவதைக் காண்கிறீர்கள் அத்தோடு தாங்கள் எல்லா வித விளையாட்டுக்களிலும் வல்லவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. அவர்களின் சிதறாத கவனம் இறுதியான குறிக்கோளில் மட்டுமே இருக்கும். தாங்கள் இருக்கும் இடத்திற்கும் அடைய வேண்டிய இலக்கத்திற்கும் இடையே பெரும் இடைவெளி இருந்தாலும் அதனால் மனம் தளர்வதில்லை. அந்த இடைவெளியைக் கடக்க சின்னச் சின்ன Goal களை அமைத்துக்கொள்வார்கள். அவற்றைத் தாண்டித் தாண்டி தங்கள் இலக்கை அடைந்து விடுவார்கள். இதை ஆங்கிலத்தில் dreams with dead lines என்று நயமாகச் சொல்வார்கள்.

பிரபல உளநூல் வல்லுநர் ஆப்பிரஹாம் மாஜ்லோவின் ஆய்வுப்படி ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளூர ஒரு தாகம் இருக்கிறது. தங்களிடம் பொதிந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்திச் சாதனை புரிந்துவிட வேண்டும் என்று தவிக்கிறார்கள். ஒரு உதாரணம் பாருங்கள் 1953ம் ஆண்டில் வல்லுநர்கள் இடையே ஒரு அபிப்ராயம் நிலவி வந்தது. அதாவது எவ்வளவுதான் திறமை ஓட்டக்காரராய் இருந்தாலும் நான்கு நிமிடங்களுக்குள்ளாக ஒரு மைல் தூரத்தை ஓடிக் கடப்பது இயலாத காரியம் என்பதே அது. ஆனால் பிரிட்டனில் பிரபல ஓட்ட வீரரான ரோகர் பானிஸ்டர் அந்த அபிப்பிராயத்தை உடைத்தெறிய வேண்டும். நான்கு நிமிடங்களுக்குள்ளாக ஒரு மைல் தூரத்தை ஓடிக்காட்ட வேண்டும் என்று துடித்தார். அதை எப்படியும் சாதித்துக் காட்டிவிட வேண்டும் என்று முயன்று 1954ம் ஆண்டு ஓடினார். அவர் எடுத்துக்கொண்ட நேரம் 3 நிமிடம் 59.4 நொடிகள்! நான்கு நிமிடங்களுக்குள் ஓடிக்காட்ட முடியும் என்று நிரூபித்துவிட்டார்.! அது வெறும் உலக சாதனை மட்டுமல்ல. தன்னையே அவர் வென்று கொண்ட சாதனையும் கூட! அவருக்குப் பின் பல உலக வீரர்கள் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் ஓடிக் காண்பித்திருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு முன்பு ஒருவர் அதைச் செய்துவிட முடியும் என்று செய்து காட்டி இருந்ததால்!

ரோகர்பானிஸ்டருக்கு தன்னைவிட தன்னிடமிருந்த சுயநம்பிக்கையே அவருக்கு எடுத்த காரியத்தை திறம்பட முடிக்கும் ஆற்றலைத் தந்தது.

பாருங்களேன்... ஒரே இடத்திலுருந்துதான் தங்களுக்கு வேண்டிய பளிங்குக் கற்களை கைடோ என்பவரும் மைக்கேல் ஏஞ்லோவும் வாங்கினார்கள். ஆனால் கைடோ ஒரு ப்ளம்பர் அதனால் அவர் பெற்ற கற்களை வைத்து அவர் தொட்டிகளை (sinks) உருவாக்கினர். மைக்கேல் ஏன்ஜெல்லோ அற்புதமான சிற்பங்களை உருவாக்கினார்! ஏனெனில் அடிப்படையில் அவர் ஒரு சிற்பி. ☆

**கே.சி.பகவான்**

# ஊரின் பிரிவினையும் பிரிவின் துயரினையும் உச்சமாக வெளிப்படுத்தும் பாடல்









ஒரு காலை புகுந்தனவே
எங்களூரில் ஆமி- நாம்
உள்ளதெல்லாம் இழந்துவிட்டு
ஓடிவந்தோம் சாமி
ஊர்கூடி ஒன்றாகி வாழ்ந்ததிந்தப்
பூமி - அதை
எதிரிசேனை ஆளவிட்டு
அழுவதென்ன மாமி

இழந்துவந்தோம் ஊரை- நாம்
சுமந்துவந்தோம் துயரை''

என்ற தமிழீழப் பாடலில் வரும் ''நான் வளர்த்த மாமரமும் பூத்திருக்குமோ- இல்லை
நான் வரட்டும் என்று சொல்லிக் காத்திருக்குமோ'

என்ற வரிகள் என்னை மிகவும் கவர்ந்தன. முன்னொரு காலத்தில் கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை போன்றவர்களின் பாடல்களை எம்.எஸ். சுப்பலஸ்மி, எம்.பி.வசந்தகோகுலம், எஸ்.பி.பெரியநாயகி ஆகியோரின் பாடல்கள் கேட்டு ரசித்தது என்னவோ உண்மைதான். முழுமுதற் கடவுள் சிவனைப் பார்த்து தந்தை தாய் இருந்தால் உனக்கிந்தத் தாழ்வெல்லாம் வருமோ ஐயா.கல்லால் ஒருவன் அடிக்க ,வில்லால் ஒருவன் அடிக்க மதுரை மாறன் பிரம்பால் அடிக்க அந்தவேளை யாரை நினைத்து அழுதீரோ ஐயா என்று ஓர் அன்புள்ளம் கண்ணீர் சிந்துவதாகப் பாடப்பட்ட பாடலை அக்காலத்தில் ஆத்மீக ரீதியில் ரசித்த எனக்கு இப்போதெல்லாம் ஆட்சியின் சுமை குறைக்க பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் பிரம்படி வாங்கிய கதையை தமிழீழத்தின் சுதந்திரத்திற்கான தீச்சட்டியைச் சுமந்து அடிபடும் மக்களின் நிலையுடன் ஒப்பீடு செய்யத் தோன்றுகின்றது.

நாமும் பிறர் சுமை, ஏதிலிகளின் சுமையைச் சுமக்க முயல வேண்டும் என எண்ண வைக்கின்றது. நான் வயோதிபன் சுமை சுமக்க முடியாதவன். ஆனால் இந்த மண்ணைவிட்டு ஓடாது இங்கே வாழ்வதே சுமை சுமப்பதைப் போல்தானே என எண்ணி ஆறுதலடைகின்றேன். கட்டெறும்பு என்னைக் கடிக்கத் தொடங்கிய பின் வானொலியில் பாட்டுக்கள் ஒலிக்கும்போது காதைப்பொத்திக்கொண்டு காததூரம் ஓடி விடுவேன். அண்மையில் புலிகளின் குரல் நிகழ்ச்சியை ஒலிபரப்பின் மூலம் மக்கள் கேட்க வசதியாக ஒழுங்கு செய்யப்பெற்றுள்ள பொதுஇடத்தில் நடந்த களைதீர சிறிது நேரம் ஆறுதலெடுத்து நின்றேன்.

அந்தவேளைதான்..........
இழந்துவந்தோம் ஊரை- நாங்கள்
சுமந்துவந்தோம் துயரை

என்ற பாடல் ஒலித்தது. பழைய பாடல்களுக்குப் பழகிப்போன காதுகள் புதிய பாடல்களைக் கேட்டுப் புண்படும் உள்ளம். இரண்டுமே இப்பாடலில் என்னை அறியாமல் ஒன்றிவிட்டன. பாடல் முழுவதும் ஊரை இழந்து உயிர் தப்பினால்போதும் ஆலமரத்தடியில் இருந்து அடுப்பெரித்து அகதியென்ற பெயருடனே பாய்விரிக்கும்அவலத்தை கூறியதாயினும் பாடலில் வரும்
''நான் வளர்த்த மாமரமும் பூத்திருக்குமோ-
இல்லை
நான்வரட்டும் என்று சொல்லிக்
காத்திருக்குமோ

என்ற வரிகள் பாடலில் நயமாக அமைந்துள்ளன. வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வரும் முன் தனது வீட்டில் மாமரம் ஒன்றிற்கு சிரமமாய் தண்ணீர் ஊற்றி வளர்த்த பெண்ணொருத்தி இடப்பெயர்வின் பின் வன்னிக் குடியிருப்பு ஒன்றில் அகதி என்ற பெயருடன் பாய்விரித்து படுக்கையில் தன்ஆதங்கங்களை கண்ணீருடன் பாடுகின்றாள்.

கல்லையும் கரிக்கும் கனிவும் துல்லியமாகத் தெரியும் அவலமும் வரிக்கு வரி வரிகளுக்கிடையே நெளிந்து செல்கிறதுஎன்பது உண்மை. ஆனால் இதை எழுதிய கவிஞர் கூறியுள்ள விஞ்ஞான உண்மைதான் என்னை வியக்க வைக்கிறது.

விஞ்ஞானிகள் தாங்கள் வளர்க்கும் தாவரங்களுடன் பேசியதை அன்பு, பிரிவு,சோகம் போன்ற உணர்வுகளைப் பகிர்ந்துகொண்ட விதத்தை விபரித்திருக்கின்றார்கள். இந்தப்பாடலைப்பாடும்பெண் நினைக்கின்றாள் மாமரம் பூக்கும் காலம் வந்துவிட்டதே. நான் நீரூற்றி வளர்த்த மாமரம் பூத்திருக்கத்தானே வேண்டும் என்று. ஆனால் அவளுக்கு ஏதோவொரு சந்தேகம். அவள் நீரூற்றி வளர்த்த மாமரம் தனது அக்கா அகதியாகிப்போனதால் அவள் குரல்கேட்கவில்லையே என்றேங்கி இயற்கையாகக் காலத்திற்குப் பூக்கும் தன்மையைக் கூட இழந்துவிடுமோ என்று நீரூற்றிய அன்பு அக்கா நினைக்கின்றாள் என்பதைத்தான் பூத்திருக்குமோ என்ற கேள்விக்குறியுடன் நிறுத்தினாள்.

அத்துடன் நின்று விடவில்லை அவள். மாமரம்தன்னை நேசிப்பதை அறிவாள். என் அக்கா வரட்டும் அதற்கு முன் பூத்துக்காய்த்தால் அக்காவின் வீட்டை ஆக்கிரமித்திருப்பவன் அதை திண்டு குரோதத்துடன் பார்ப்பான். எனவே அக்கா வரும் வரை பூக்காது காத்திருப்போம் என மாமரம் நினைக்குமோ என்று நிரூற்றி வளர்த்த அக்காவின் அன்புள்ளம் நினைக்கிறது.

இது கவிதையா, காவியமா இல்லை ஓவியமா சிறி இராமபிரானின் அழகை வர்ணிக்கப புறப்பட்டு மயிலோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ என்றெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து ஒன்றிலும் திருப்தி வராமல் ஐயோ என்ற அமங்கலிச் சொல்லையே அங்கலாய்ப்பின் வெளிப்பாடாக்கி பாடலின் சிகரமாக்கி அமங்கலத்தை மங்கலமாக்கிய கம்பன் போல எனக்கும் இந்த வரிகள் பிறப்பை வர்ணிக்க முடியாத அளவு கையறு நிலையில் ஐயோ எனத் தோன்றுகின்றது.

இந்தப்பாடலை எழுதியவர் யார்? பாடியவர்கள் யார்? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் இந்த வரிக்குள்ளே பொதிந்து கிடக்கும் சிறப்பு என்னை மலைக்க வைக்கின்றது. இதன்விளைவாக தமிழீழப் பாடல்களைக்கேட்க ஆசைப்பட்டு புலிகளின் குரலை ஒலிபரப்பியில் கேட்கும் இடத்திற்கு தினமும் இருட்டு நேரங்களில் கூட தடவித் தடவி நடந்து திரும்ப வைக்கிறது.

நடந்தாற்கு நட்டமில்லை என்பதை உண்மையாக்கும் விதத்தில் பல நல்ல கருத்துள்ள விடுதலைக் கீதங்களைக்கேட்க முடிகின்றது. வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்........ தாயகக் கனவுடன் சாவினைத்தழுவிய சந்தனைப் பேழைகளே....... கரும்புலிகள் என நாங்கள்....... வீசும் காற்றே சேதி சொல்லு..... தாயிலும்மேலான தாய்நாடு....சிங்களவர் காலடி படலாமோ...... இந்தமண் எங்களின் சொந்த மண்..........பூபாளம் பாடும்நேரம் ......... எனப் பல அரிய கருத்துக்களைக் கொண்ட பாடல்களை இன்னும் இன்னும் கேட்டு மகிழ ஆசை.

பல்லவி

ஒரு காலை புகுந்தனவே எங்களூரில் ஆமி-
நாங்கள்
உள்ளதெல்லாம் இழந்துவிட்டு ஓடிவந்தோம்
சாமி
ஊர் கூடி ஒன்றாகி வாழ்ந்ததிந்தப் பூமி- இதை
எதிரிசேனை ஆளவிட்டு அழுவதென்ன மாமி

அனுபல்லவி

இழந்து வந்தோம் ஊரை- நாங்கள்
சுமந்து கொண்டோம் துயரை

சரணங்கள்

கையெடுத்த பொருட்களுடன் கால்கள் ஓடுதே-
ஓடி
தங்க இடம் இன்றியிந்த உயிர்கள் வாடுதே.
வாய்பேசாப் பிராணிகளும் போரில் சாகுதே-
எங்கள்
தாய் நிலத்தை இழந்ததினால் நெஞ்சம்
வேகுதே.
மாளிகையைக் கட்டிவிட்டு வந்தோமே -
ஒரு
மண்குடிசை கூட இன்றி அந்தரித்தோமே
ஆலமரத்தருகிருந்து அடுப்பெரித்தோமே-
நாங்கள்
அகதியென்ற பெயருடனே பாய் விரித்தோமே
வான் உயர நின்ற பனைகள் தனித்திருக்குமா-
எந்தன்
வாசமுல்லைக் கொடியெரிந்து சரிந்திருக்குமா.
நான் வளர்த்த மாமரமும் பூத்திருக்குமா-
இல்லை
நான் வரட்டும் என்றே சொல்லிக்
காத்திருக்குமா.

பாடல் எழுதியவர்: வேலணையூர் சுரேஸ்
பாடியவர்கள்: சீலன், கல்யாணி
இசை: சிறீகுகன்,சிவராம்
வெளியீடு: புலிகளின் குரல் நிறுவனம்

**-கே.பீ.விசாகப்பெருமாள்-**

☞ அசட்டுத் துணிச்சலுடன் முடிவு எதுவும் எடாதே; ஆழச் சிந்தியாமல், செயலில் ஈடுபடாதே. - அபுல் காசிம் ஃபிர்தோஸி



உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனின் தாயார் அழகம்மாள் சமீபத்தில் மட்டக்களப்பில் காலமானார். காசி ஆனந்தனின் பாஸ்போட்டை இந்திய சி.பி.ஐ உளவு நிறுவனம் முடக்கி வைத்திருப்பதால் கடந்த பத்து ஆண்டுகளாக அவரால் தமிழீழத்துக்கு வரமுடியவில்லை. தாயார் இறந்த போதும் இங்கு வர அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. தன்னுடைய அம்மாவின் நினைவுகளை எழுதுகிறார் கவிஞர்...



எது அம்மா?

அம்மாவைக் கடைசியாகப் பார்த்து 12 ஆண்டுகள் ஆகின்றன. வீட்டுக்கு வருகிறவர்களை எல்லாம் 'தம்பி எப்ப வருவான்?' என்று விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தாளாம் அம்மா.

# அம்மா... உனக்காகக் காத்திருக்கிறேன்!

தந்தை செல்வா தலைமையில் அறப்போராட்டம் நடந்த காலம்..

சிறிலங்காவின் சிறைகளில் ஐந்து ஆண்டுகள் நானும், இரண்டு ஆண்டுகள் என் தம்பிகள்-சிவ ஜெயமும், சுதர்சனும் சிறைவாசம்.

பின்னாளில் - என் தங்கை சிவமலரை மேசையில் கிடத்தி அவள் உடல்மீது சிறிலங்காவின் காவல்துறை ஆட்கள் இரும்புச் செருப்பால் ஏறி மிதித்து வெறியாடிய கொடிய பொழுதுகள்.

இரண்டு ஆண்டுகள் அவளைக் கண்கலங்க 'பூசா' சிறைமுகாமின் இருட்டறைகளில் கசக்கிப் பிழிந்தெடுத்த இருண்ட காலம்.

தம்பி சிவஜெயம் களத்தில் நஞ்சருந்தி தன்னை மாய்த்துக் கொண்ட தற்கொலை நிகழ்ச்சி.

எங்கள் வீட்டில்அடிக்கடி பாயும் உளவுத்துறை படை ஆட்களின் எகிறல்கள் பாய்ச்சல்கள்.

அனைத்தையும் எதிர்கொண்டவள் அம்மா.

மட்டக்களப்பு - மீன்பாடும் தேனாடு எங்கள் மண்.

நீலச்சேலை விரித்தாற்போல இருபது கற்கள் நீளத்தில் எழிலான உப்பேரி.

பால் வெளிச்சம்பொங்கும் முழு நிலவு. இரவுகளில் மீன்கள் பாடும்.

உப்பேரியில் ஐந்து கற்கள் இடைவெளியில் அப்பாவின் ஊர் அமிர்தகழி அம்மாவின் ஊர் நாவற்குடா.

இரு ஊர்களுக்கும் அடிக்கடி உப்பேரி வழியாக சின்னஞ்சிறுவனாய் தோணியில் அம்மாவோடு பயணம்செய்த நினைவுகள் இனிமையானவை.

'ஆறு எவ்வளவு வடிவா இருக்கு பாருடா என்பாள் அம்மா'

தங்கப் பரிதியின் ஒளி வெள்ளத்தில் குளித்து எங்கள் உப்பேரி தகதகக்கும்.

தோணிக்குப் பக்கத்திலேயே மணலை மீன்கள் துள்ளிப் பாயும்.

உப்பேரியின் இரு கரைகளிலும் மயில்கள் வரிசைகட்டித் தோகை விரித்தாற்போல் கூத்தாடும். தென்னைகள் உள்ளத்தில் கள்ளூற்றும்.

என் மண்ணின் மேல் எனக்குப் பற்று வரச்செய்தவள் அம்மா.

அம்மாவைப் பிரிந்து வாழ்ந்த காலமே என் வாழ்வில் அதிகம்.

பத்தாவது அகவையிலேயே பல கற்கள் தொலைவில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போன விடுதி வாழ்க்கையில் 3 ஆண்டுகள்,தமிழ்நாடு வந்து பச்சையப்பன் கல்லூரியில் 5 ஆண்டுகள். சிறைச்சாலையில் 5 ஆண்டுகள்,மருத்துவமனையில் 5 ஆண்டுகள், தலைமறைவு வாழ்க்கையில் 5 ஆண்டுகள். 90ல் தமிழ்நாட்டுக்கு வந்த பின்பு வழக்கு உசாவல்களில் 10 ஆண்டுகள். அங்கும் இங்குமாய் 5 ஆண்டுகள் எனது 65 ஆண்டுகால வாழ்வில் 35 ஆண்டுகள் அம்மாவைப் பிரிந்த வாழ்க்கையே.

அம்மாவைப் பார்க்க நான் ஏங்கியிருக்கிறேன். துடித்திருக்கிறேன். கனவுகளில் அம்மாவைக்கண்டு எழுந்து உட்கார்ந்து அழுதிருக்கிறேன்.

இப்போதெல்லாம் அம்மாவின் நினைவு வரும்போது அம்மாவின் பல முகங்கள் நினைவில் எழுகின்றன.

ஒவ்வொரு இடைவெளியின் போதும் நான் பார்த்த அம்மாவின் ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு விதமாய்...

விம்மலோடு தேடுகிறேன்.

என்மேல் அம்மா உயிரையே வைத்திருந்தாள்.

தம்பி சிவஜெயம் உயிரோடு இருக்கும்வரை அவன்தான் அவளுக்குச் செல்லப்பிள்ளை.

களத்தில் அவன் மாண்ட பின்பு அந்த இடம் எனக்கு.

கடிதங்களில் என் உள்ளத்தின் பெருமுச்சை நெஞ்சப் புண்ணில் வடியும் குருதியை வெளிக்காட்டினால் அம்மா கலங்கிப்போவாளே என்று, நாலு வரிகள் எழுதுவேன்.

ஒவ்வொரு கடிதத்தையும் பத்து- இருபது தடவைகள் திரும்பத் திரும்பப் படிக்கச் சொல்லி அந்த நாலு வரிகளோடு ஒன்றிப் போவாளாம் அம்மா.

93 அகவையில் கண்களை மூடுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு அம்மாவுக்கு மறதிநிலை தொடங்கிற்று.

பிரான்சில் இருந்து பெரியக்காவின் மகள் மீராவும், அவள் கணவன் சுதாவும் மட்டக்களப்புக்கு போனவர்கள்.அம்மாவைப் பார்க்கப் போயிருக்கிறார்கள். 'சுதாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு வந்திட்டியா தம்பி. உன் பிள்ளைகள் இரண்டு பேரும்மருத்துவம் படிக்கிறார்களாமே திரும்பிப் போமாட்டியா தம்பி'. என்று அவனை நானாக நினைத்து கசிந்து கண்ணீர் சொரிந்திருக்கிறாள் அம்மா.

அம்மா, பன்னிரெண்டு ஆண்டுகளாக உன்னை ஏமாற்றியபடியே நான் இருந்து விட்டேனா? நானே உன்னைச் சாகடித்தேனா? அம்மாவின் வாழ்வில் ஏற்பட்ட பழைய நிகழ்வொன்றை அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாள் அம்மா.

திருமணம் ஆனமுதல் வாரத்திலேயே அம்மாவை அழைத்துக்கொண்டு கடற்கரைக்குப் போனாராம் அப்பா.

அப்பா நீச்சல் தெரிந்தவர். இருவரும் கடலில் குளிக்க இறங்கிருக்கிறார்கள்.

ஒரு பேரலை அம்மாவை கடலில் அடித்து வீழ்த்த, அப்பா தாவி அம்மாவை இறுகப் பற்றியும் ஓங்கி எழுந்த பேரலை இருவரையும் கடலில் இழுத்துக்கொண்டு போயிற்றாம்.

எதிர்பாராத விதமாக கரை நோக்கி வந்த இன்னொரு பேரலை இருவரையும் மீண்டும் இழுத்து வந்து கரையில் வீசிவிட்டு எழுந்து தணிந்து ஓய்ந்திருக்கிறது.

அம்மா அடிக்கடி சொல்வாள்.. கடலில் அண்டைக்குத் தொடங்கின போராட்டம் இன்னும் தான் ஓயுதில்லை.

உண்மை தான் அம்மாவின் வாழ்வில் எத்தனையோ கடல்கள், எத்தனையோ போராட்டங்கள். கடலலைகளை பலமுறை கட்டிப்புரண்டு கரையேறி இருக்கிறாள் அம்மா.

இயற்கையின் கடைசி கொந்தளிப்பில் அடித்த இறுதி பேரலையில் தன் 93வது அகவையில் இம்முறை போன அம்மா திரும்பவே இல்லை

காத்திருக்கிறேன் கரையில்..



உணர்ச்சிக்கவிஞர்
காசிஆனந்தன்

# ஊர்கோலம்

## எரிவும்... தணிவும்



முன்னெப்போதும் இல்லாத அளவுக்குசூரியன் நெருப்பு மழையை பொழிந்து கொண்டிருக்கிறான். தாங்க முடியாத அனல்காற்று கண்திறந்து பார்த்தால் கூசும் அளவுக்கு வீசுகிறது. லா.சா ராமாமிர்தம் என்ற எழுத்தாளர் தனது சிறுகதை யொன்றில் இப்படியானதோர் காலநிலையின் அக்கினித்தகிப்பினை வெளிப்படுத்த 'மலை நடுங்கும் கானல்'- என ஒரே வசனத்தை எழுதிப்பிரமிக்க வைத்தது இப்போது நினைவுக்கு வருகிறது.

ஒன்பது மணிக்கு மேல் வீதியில் இறங்குவது தீக்குளிப்பு நடத்துவதற்கு ஒப்பானதாகவே இருக்கிறது.

பரந்தன் முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அந்த அரசமரத்தடியில் அந்த ஆச்சி ஒரு கடலைக்கடை வைத்திருந்தார் வெய்யிலுக்கு மரத்தடியில் ஒதுங்கிய வேளையில் அவருடன் பேச்சுக் கொடுத்தேன்.

"என்ன ஆச்சி இந்தக் கொழுத்தும் வெய்யிலிலை மரத்தடியில இப்பிடியே இருக்க எப்படி உன்னால முடியுது.... எங்களாலேயே இந்த அனல்காற்றை தாங்கமுடியவில்லை... "என்றேன்.

"என்ன செய்யிறது...... வெளிவெக்கையைப் பார்த்தா .... உள்வெக்கையை தணிக்க முடியாதே...."என்றார் ஆச்சி.

எனக்குப் புரியவில்லை..... ஆச்சியின் பக்கத்தில் இருந்த பானையில் என்பார்வை பதிந்து நிலைகொண்டது.

பானையிலிருந்து ஒரு குவளைத் தண்ணீரை அள்ளிக் குறிப்பறிந்து தருவது போல் நீட்டி 'இந்தாடாப்பா வந்தகளைக்கு இதைக்குடி' என்றாள்.

தண்ணீர்அமிர்தமாக இறங்க ஆச்சியை நன்றியோடு பார்த்தேன்.

'வெளியிலை வெய்யில் நெருப்பாய்த்தான் எரியுது... ஆனா.. உள்ளுக்கை வயிற்றுக்குள்ளை பசி அதைவிட நெருப்பாய் எரியுமே..... அதைத்தணிக்க நாலு பணம் உழைக்க வேண்டுமே என்றாள்....

நரைதிரண்டு , சுருக்கெழுந்து ,பொக்கையான முகத்தில் ஏதோ நம்பிக்கையுடனான எதிர்பார்ப்பு எனக்குத்தெரிய " ஆச்சி ஒரு பத்துருபாய்க்கு கடலை தாங்கோ என்றேன்..."

இப்போது கடலை தின்னும்அவசியம் எனக்கில்லை ஆனால் அந்த ஆச்சியின் வயிற்றில்ஏதோ ஒரு பகுதியில் குளிர்ச்சி ஏற்பட உதவிய திருப்தி எனக்குள்ளும் ஒரு குளிர்மையை ஏற்படுத்த......நான் தீமிதிப்பில் இறங்கலானேன்......

"தம்பி எடேய் நிழலாய்ப் பார்த்து நிண்டு நிண்டு போ"என்ற ஆச்சியின் குரலில் ஒரு குளிர்காற்றின் இதமான வருடலை உணர்ந்தேன்.

## திலீப தடங்கள்

இது திலீப நாட்கள்.

இந்தியா குறித்த எங்கட சனத்தின் அப்பாவித்தனமான நம்பிக்கையை உடைக்கவும் அதன் நிஜயவடிவத்தை மக்கள் உணர வைக்கவும் தன்னையே 'பசி'த்தீக்கு இரையாக்கிக்கொண்ட ஒப்பற்ற தியாகி தன்னைத்தானே உயிருருகச் செய்து கொண்ட நாட்கள்.

ஓய்தலறியா உழைப்பாளியான அவனது சுதந்திர வேட்கை . அவனை உறங்கவே விட்டதில்லை. எல்லாவற்றிலும் முழுமையைத் தேடமுயலும் சலிப்பற்ற முயற்சியை நான் பலதடவை பார்த்து பிரமித்துள்ளேன். பிரச்சினைகளை அவர் அணுகும்முறை அலாதியானது.

ஒருசமயம் ஒரு அம்மா திலீபனைப் பார்ப்பதற்காக வந்திருந்தாள். இயக்கத்துக்குப் போய்விட்டதன் மகனைப் பற்றி விசாரித்தாள். அந்தத் தாயின் மனத்தவிப்பு திலீபனுக்குப் புரிந்திருந்தது. அந்தத் தாயின் மன அவலங்களை பொறுமையோடு கேட்டான். அந்த அம்மா தொடர்ந்து பல நாட்கள் திலீபனிடம் வந்து போவதைப் பார்த்தேன்.

ஒருநாள் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் ஒருவரைப் பார்க்க வேண்டும் என்று என்னையும் கூட்டிச் சென்றான். அங்கே அந்த அம்மாதான் சுகமில்லாமல் படுத்திருந்தாள். அவளிடம் ஒரு மகனுக்குரிய தன்மையோடு கதைத்தான்.... மாக்கரைத்துப் பருக்கினான். புறப்படும்போது அந்த அம்மாவின் கையைப் பிடித்து ' நானிருக்கிறன்அம்மா ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ' என்றான்.

பலநாட்களின் பின் அந்த அம்மா என்னைக் கண்டு' தம்பி திலீபன் எங்கை..... அஞ்சாறு நாளாய்க்காணேல்லை......என்ரை பிள்ளையைப் பார்க்காமல் இருக்க என்னமோ போலிருக்கு..... ஒருக்கா வந்து பார்க்கச் சொல்லு....'என்றாள். நான் திகைத்துப்போனேன்..... தன் மகனைப் பற்றி விசாரிக்க வந்த தாயை தன்னையே மகனாக நினைக்கவைத்து அமைதியடைய வைத்த அணுகுமுறையை நினைத்துப்பார்த்தேன்.....

இது 1986இல் நடுப்பகுதியில் நடைபெற்றது.

1987இல் திலீபனின் உண்ணாவிரத மேடையருகே சோர்ந்து, துவண்டு , கண்களில் நீர்வழிய நல்லூர் கோயிலை நோக்கி கூப்பிய கரங்களுடன் இருக்கும்அந்த அம்மாவை மீண்டும் காண நேர்ந்தது.

என்னால் அவருடன் எதுவும்பேச முடியவில்லை......அம்மா பார்வையாலேயே தன்ஆன்ம தவிப்பை வெளியிட்டாள்.

திலீபனுக்கு இவையெல்லாம்தெரிந்திருக்காது . சுற்றிவர கண்ணீர்மல்க இருந்த அத்தனை தாய்மாரும் தங்களின் மகனாகவே திலீபனை எண்ணியிருக்கவும் கூடும். ஆனால் திலீபனின் மனதில் அவர்கள் அனைவரும்தமிழீழத்தாயின் வடிவமாகவே தென்பட்டிருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

இந்த நாட்களில் அவன் குறித்த நினைவுகள் மண் பற்றியும், மனிதம் பற்றியும் சிந்திக்கவே வைக்கின்றன.

"திலீபன் அழைப்பது சாவையா..... இந்த சின்ன வயதில் அது தேவையா" எனக் கேள்வியுடன் தொடங்கி ஒலிக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி அண்ணாவின் பாடல் 'பழிவாங்கும் ஒரு போர் வெடிக்காதா; இங்கு பாரதம்பாடம் படிக்காதா' என்ற தீர்க்கதரிசன வரிகளுடன் முடியும்போதுதான் திலீபனின் தியாகத்தின் பரிமாணமே விளங்குகின்றது.

ஆமாம் இந்த நாட்கள் மட்டுமல்ல ...... எந்த நாட்களுமே எமது வரலாற்றில் திலீப நினைவுகளுடன் தொடர வேண்டிய நாட்களே......

## தெருப்பேச்சு

என்னடா இது ..... இந்தச் சந்திரிகாவுக்கு ஒருமாதிஆயிட்டுது போலை. முந்தித் தன்ரை ஆட்களின் தோலை உரிப்பன் எண்டா, பிறகு ரணிலின் கழுத்தை பாய்ந்து கடிப்பன் எண்டா...... இப்ப என்னடா எண்டா ஐநூறு பேரையாவது கொல்லாமல் சாகமாட்டன் எண்டிறா.....

'ஓ....... அதைச் சொல்லுறியா.... அது அவவுன்ரை பரம்பரைக்குணம் அவவுன்ரைஅப்பாவும் அம்மாவும் ரகசியமாக செய்ததை இவ பகிரங்கமா சொல்லிக்காட்டி செய்யுறா அவ்வளவுதான்.....'

'ஓமடாப்பா... இவ முந்தி பிரான்சிலை ஏதோ ஒரு கராட்டிப் பள்ளிக்கூடத்திலை படிச்சுத்தான் பட்டம் வாங்கினவா எண்டு சண்டேலீடர் பேப்பரிலை படிச்ச ஞாபகமிருக்கு..... உந்த 'ஸ்ரண்ட்' வேலையெல்லாம் செய்தாலும் செய்வா கவனமாகத்தான் இருக்க வேணும்.

புதுக்குடியிருப்பில் ஒரு முடி திருத்தகத்தில் கேட்டது. பாதசாரி

தன்னம்பிக்கை உன்னை உயர்த்தும்; அவநம்பிக்கை அவலத்தில் ஆழ்த்தும். - யாரோ

## முன்பள்ளி கல்வி மேம்பாட்டு ஆக்கப் பொருட் கண்காட்சி


தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி பிரதேச முதன்மை நிறுவனமும் கிளி/அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் கிளிநொச்சி பிரதேச நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் ஆக்கப் பொருட் கண்காட்சி

இடம் - கிளி/ அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம்
காலம் - 28-09-2002 சனிக்கிழமை
நேரம் - காலை 09 மணி முதல் இரவு 9.00 மணிவரை (சி7397)

## நீங்காத நினைவலைகள்

6ம் ஆண்டு

தாயின் மடியில் 10-06-1976



தாயக மண்ணில் 07-06-1996

### கப்டன் சுமன்

(த. தவனேசன்)

5ம் ஆண்டு

தாயின் மடியில் 10-09-1978



தாயக மண்ணில் 27-09-1997

### கப்டன் முத்தமிழன்/அமன்

(த. சிவறஞ்சன்)

### சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி

அண்ணனின் வழியினில் இருவரும் சென்றீர்கள் - அவன்
ஆணையின்படியே பகையினைக் கொன்றீர்கள்
எண்ணிய வண்ணம் இலட்சியம் முடித்தீர்கள் - வீரக்
கண்மணிகள் என எங்கள் இதயத்தில் நிறைந்தீர்கள்,
துப்பாக்கி ஏந்தியே போர்க்களம் போனீர்கள் - பகை
தப்பாது அழித்துமே மாவீரர் ஆனீர்கள்
இப்போது தமிழீழம் எங்களின் கையிலே- ஆனாலும்
எண்ணிய எண்ணங்கள் ஈடேறும் வேளையில் - நீங்கள்
இல்லையே என்று உறவுகள் தவிக்கின்றன.

(2469) இந்நாளில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களிற்கு எமது இதயபூர்வமான வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.


தகவல்- த.நிசாந்தினி

குடும்பத்தினர்
மா. தனபாலசிங்கம்,
நட்டாங்கண்டல்.

## 4ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
1974-04-18

தாயக மண்ணில்
1998-09-27



### லெப்.கேணல் ஜனா/காந்தசீலன்

(நடேசன்- ஜெயந்தன்)

எம் அன்புச் செல்வமே
ஓங்கி வீசியடித்த ஓயாத அலையில்
ஓய்வு பெற்றுக் கொண்டாயே
உன் பாதை நோக்கி நாமும்.........

எங்கள் அன்புச் செல்வங்கள் லெப். கேணல் ஜனா, 2ம் லெப் ஜனகா, கப்டன் றேகன் உடன் ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவுகூருகிறோம்.

த.முகவரி (2481) குடும்பத்தினர்

இல: 282, 3ம் யூனிற், யோகபுரம், மல்லாவி. மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

## வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

கணனிசார் அறிவியல் தேடலில் ஆர்வமுள்ளவருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதில் முன்னுரிமை பெற்றுக்கொள்வதற்கும் அரச,அரச சார்பற்ற நிறுவனங்களில் இலகுவாக வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் முதன்மைத்தகைமைகளாக எதிர்பார்க்கப்படும் கணனி பாடநெறிகளான

HARD WARE

குறிப்பு: 01-10-2002 காலை 10.00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்பித்தவர்கள் சமுகமளிக்கவும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி 31-09-2002

விபரங்களுக்கும் மேலதிக தகவல்களுக்கும்

*நிலா பதிப்பகம்,*
*பிரதானசாலை*
*கிளிநொச்சி.*

(சி.7396)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 1976 - 08 - 27



மண்ணுக்காக 1998 - 09 - 27

### லெப் இசைச்சிட்டு

(பாலசுந்தரம் சுந்தரேஸ்வரி (றஜனி))

*அண்ணன் வழியில்*
*இணைந்த இசைச்சிட்டு*
*மண்ணின் மடியில்விதையாகி*
*ஆண்டுகள் நான்காகின்றன.*
*எங்கள் மனங்களில்*
*நீ மலராகித் தினம்*
*மலர்ந்து கொண்டேயிருக்கின்றாய்*
*என்றே ஒருநாள்*
*மீண்டும் எங்கள் சந்ததிக்குள்*
*கனியாக வருவாய்*

இவருடன் வீரச்சாவடைந்த மற்றைய மாவீரர்களையும் நினைவு கூருவதோடு இவருடைய இல்லத்தில் இன்று நடைபெறும் (27.09.2002) மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள்,உற்றார் உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வத்திராயன் வடக்கு,
வடமராட்சி கிழக்கு

அப்பா,அம்மா,
சகோதரர்கள், (2484)
போராளி மங்களேஸ்.

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவு அலைகள்

அன்னை மடியில்
மகவாக
08-04-1971



ஈழமண்ணில்
வித்தாக
27-09-2001

### மேஜர் சேல்டன்

(வில்டன், ரகு-நிந்தவூர்-6, அம்பாறை)

தேச விடியலுக்காய்-தேடித்
தலைவர்சேனை
தனில் இணைந்தாய் - இன்று
காவியமாகி ஓராண்டு
ஆனதையா உன்னை நாம்
மண்ணுக்கு வித்தாக்கி
தேடிவந்த பகைமுடிக்க
நீ செய்த அரும்பணிகள்
காலமெல்லாம் உன்பெயரை
தாயகத்தில் ஒலிக்கச் செய்யும்
மறக்கமுடியவில்லை- உன்னோடு
இணைந்திருந்த இனிய நாட்களை
பாசமழை பொழிந்த எங்கள்
குல மணியே எம் பிரிவால்
நெஞ்சு உருகி நிற்கின்றோம்
இன்று எம்மண்ணில் நீ இல்லை
உன்சாவை எம்மால்
மன்னிக்க முடிவில்லை.

27.09.2002 வெள்ளிக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும்,மதிய போசனத்திலும் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
[வலயக்கல்விபணிமனை அருகில்]

தகவல்
மைத்துனர்,
மு.செந்தில்[போராளி]
தாய்,தந்தை,தங்கைமார்,தம்பி
மருமக்கள். (2483)

சிறிய தவறுகளைத் தவிர்க்காதவன், மெல்ல மெல்ல, பெரிய தவறுகளில் விழுவான். - தாமஸ் ஏ.கெம்பிஸ்

# நேர்நோக்கு — வருமுன் காப்பதே சிறந்தது

இலங்கை இனப்பிரச்சி னைக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் வேளையில், இந்த முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளை சிறிலங்காக் கடற்படையினர் தொடர்ச்சியாகவே மேற்கொண்டு வருகின்றனர். முதலில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லாதவர்களாக கடற்படையினரே இருந்தனர். அதாவது விடுதலைப் புலிகளின் கடல் வழிப்போக்குவரத்துக்கு தடை விதிப்பவர்களாகவும், வடக்குக் கிழக்கில் வாழும் கடற்றொழிலாளர்கள் தமது தொழிலைச் செய்வதற்கு முட்டுக்கட்டை போடுபவர்களாகவும் இவர்கள் இருந்து வந்துள்ளனர். இதற்கு அவர்கள் கடலிலே யுத்தநிறுத்தமில்லை என்றும் கூறிவந்தனர்.

அத்துடன் தீவகப்பகுதியிலும், ஏனைய கடற்படையினர் நிலைகொண்டுள்ள பகுதியிலும் முதலில் மக்கள் நடமாட்டத்துக்கே தடைவிதித்த இவர்கள், பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் தீவகப் பகுதி முழுவதையுமே பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி விடுதலைப் புலிகளை அரசியற் பணிகளுக்குச் செல்ல விடாது தடுத்தனர். பின்னர் நிபந்தனைகள் பலவற்றை விதித்து அவற்றுக்கு ஒப்புக் கொண்டாலொழிய தீவகப் பகுதிக்குள் செல்லமுடியாது என அரசியற் போராளிகளைத் தடுத்தனர்.

பின்னர் பல நிபந்தனைகளின் கீழ் அரசியல் பணி ப்போராளிகளை தீவகத்தினுள் செல்ல அனுமதித்த போதும் அதன் பின்னரும் போராளிகள் மீது பல கெடுபிடிகளை மேற்கொள்ளத் தவறவில்லை

தீவகப் பொறுப்பாளரும், வேறொரு போராளியும் தாக்கப் படும் நிலை கூட ஏற்பட்டது. அதற்கு விசாரணைகள் நடத்தப்பட்டபோதும் நிலைமை பெரிதும் சீரடைந்ததாகத் தெரியவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன்பும் தீவகத் தினுள் பிரவேசித்த அரசியல் பணிப் போராளிகள் மீது கடற்படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டனர். அதேவேளை தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்பட ஊர்தி பவனி சென்ற வேளையிலும் கூட சிறிலங்கா கடற்படையினர் அதற்கு இடையூறு விளைவித்துள்ளனர்.

அத்துடன் காரைநகரின் சில பகுதிகளில் இரவில் மக்கள் தமது வீடுகளில் தங்குவதற்கு கடற்படை தடைவிதித்துள்ளமையால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேவேளை முல்லைக்கடற் பரப்பில் மிக அண்மையில் கூட சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற் கொண்டுள்ளனர்.

இவ்வாறாக சிறிலங்கா கடற்படையினர் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் கெடுபிடிகள் பல ஐயப்பாடுகளை ஏற்படுத்துகிறது.

அதிலும் குறிப்பாக தீவிரமான யுத்தம் நடைபெற்ற வேளையில் கூட படைமுகாம் எதுவும் இல்லாத நெடுந்தீவில் சிறிலங்கா கடற்படை தனது முகாமை அமைக்க முயன்றமையானது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

வழமைக்குமாறாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமிருந்து மூன்று வருடகாலத்திற்கு பதவி நீடிப்புப் பெற்றுக் கொண்ட கடற்படைத்தளபதி அதற்குப் பிரதியுபகாரமாக என்ன செய்யப் போகிறார் அல்லது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பது கேள்விக்குரிய விடயமாகவேயுள்ளது

ஒரு புறம் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் வழங்கிவரும் ஆதரவு சமாதான முயற்சிகளை முன்தள்ளிக் கொண்டு செல்கை யில் மறுபுறம் கடற்படையினரின் செயற்பாடுகள் இவற்றுக்கு இடையூறு விளைவிப்பனவாக அமைந்து விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களுக்கு கடற்படை அதிகாரிகள் மன்னிப்புக் கோரியதாகவும் புலிகளின் ஆட்சேபனையையடுத்து கடற்படையினர் நெடுந்தீவில் தமது முகாம் நிறுவும் முயற்சியை கைவிட்டுவிட்டதாகவும் வரும் தகவல்கள் சாதக்மானவையாக இருப்பினும் சம்பவங்கள் நடைபெற்றபின் பரிகாரம் தேடுவதைவிட பாதகமான சம்பவங்கள் நடைபெறாது பார்த்துக் கொள்வதே சிறந்ததாக அமையும்.

ஐக்கிய தேசிய முன்னனி அரசாங்கமும் சரி, இவ்வாறான சம்பவங்களுக்கு மன்னிப்பு கோரும்படை அதிகாரிகளும் சரி, சமாதான முயற்சிகளுக்குப் பாதகமான விடயங்கள் நடந்துவிடாது பார்த்துக் கொள் வதில் தீவிர கரிசனை செலுத்துவ தானது சமாதான முயற்சிகள் விரைவாக நடைபெறச் சாதகமானதாக அமையும்.

-வேலவன்

### அடுத்த ஆண்டிற்கான

# பாதுகாப்பு செலவீனம் அரசினால் குறைப்பு

இந்த வருடத்தைவிட அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்பு செலவீனம் சிறிலங்கா அரசினால் குறைக்கப்பட்டிருக்கிறது.

சிறிலங்கா பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு குறித்து ஆராயப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நகலை சமர்ப்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் சொக்ஸி இந்த வருடத்திற்கான பாதுகாப்பு செலவீனம் 51 பில்லியனாக இருந்தபோதிலும் அடுத்த ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவீனம் 35 புள்ளி 6 பில்லியனாக குறைக்கப்பட்டிருக்கிறது

அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 3400 மில்லியன் ரூபா கொல்லப்பட்ட மற்றும் காணாமல்போன படையினரின் குடும்பங்களுக்கு சம்பளம் வழங்க ஒதுக்கப் பட்டிருக்கிறது.

# வட கிழக்கு புனரமைப்பிற்கு ஐரோப்பிய யூனியன் நிதியுதவி

வடக்கு கிழக்கின் புனர்நிர்மான பணிகளுக்கென ஐரோப்பிய யூனியன் 6.4 மில்லியன் யூரோவை சிறிலங்காவின் புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

தற்போது அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான தகுந்த சூழல் உருவாகியிருப்பதாக கருதியே இந்தத்தொகை வழங்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

சமாதான முயற்சிகள் முன்னேற்ற பாதையில் செல்வதால் மேலும் பல நிதி உதவிகள் தொடர்ந்து கிடைக்கும் எனவும் இதன் மூலம் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல்வேறு புனர் அமைப்பு பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்

# இந்தியா இறுதிப்போட்டிக்கு தேர்வு மற்றுமொரு அரையிறுதி இன்று

ஐ.சி.சி சாம்பியன் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டிக்கு இந்திய அணி தெரிவு செய்யப்பட்ட நிலையில் சிறிலங்கா அவுஸ்திரேலியா அணிகளுக் கிடையிலான பரபரப்பான மற்றொரு அரையிறுதி யாட்டம் இன்று நடை பெறுகின்றது.

இவ்விரு அணியும் சமபலத்துடன் திகழ்வதால் இன்றையபோட்டி விறு விறுப்புடன் கூடிய பரபரப்பை ஏற்படுத்தும் என விமர்சகர்கள் தெரிவிக் கின்றனர்.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி வரும் 29ஆம் திகதி இந்திய அணியை இறுதி ஆட்டத்தில் சந்திக்கும்.


# சாவு அறிவித்தல்

## திரு வேலன் சிவகுரு

சில்லாலை மேற்கு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு வேலன் சிவகுரு 25.09.2002 புதன்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற வேலன் நன்னி தம்பதிகளின் அன்பு மகனும் சி.இராசம்மாவின் அன்புக் கணவரும் சி.திருச்செல்வம், சி.புலோகசுந்தரம் (பிரான்ஸ்) அற்புதசெல்வம் (லண்டன்), சி.அருந்தவகுலமணி, சி.இராசநாயகம், சி.சச்சிதானந்தம், சி.ஜெசிந்தராணி, சி.சிவகுமார், சி.கலாவதனி, சி.சரிதா, சி.சத்திவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வே.கதிரமலை (ஆரியகுளம்) அன்புச் சகோதரரும் தி.அற்புதமலர், பூ.செல்வரஞ்சிதம்(பிரான்ஸ்), அ.ரூபி (லண்டன்), இ.தங்கேஸ்வரி, ச.கோணேஸ்வரி, சி.சத்தியபாமா, அ.சிறிஸ்கந்தராசா (லொறி உரிமையாளர்), ஜெகதீஸ்வரன் (டோகா), ஆகியோரின் அன்பு மாமனாரும், தி.நிரோஜினி, தி.நிலுஜினி, தி.செல்வரூபன், சி.நிலாஜினி, சி.நிதர்சன், சி.வசிதரன், சி.யதுர்சன், சி.பிரதீபன், சி.பிரபுராஜ், அ.சகீதா, அ.சகிலா, அ.சோபிகா, இ.சிவகரன், இ.ரேணுசா, இ.றொபின்சன், இ.யசிந்தினி, இ.சிந்துஜன், ச.வினோத், ச.ரேணுகா, ச.கரன், ஜெ.கயந்தினி, ஜெ.நிரோசன், ஜெ.நெல்சன், சி.நிரஞ்சன், சி.நிமல்சன், சி.சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை கந்தரோடை, மாசிப்பிட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
அ.சிறிஸ்கந்தராசா
(மருமகன்)

(2486)


# எதிர்கால அரசியல் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலக்கம்

அரசிற்கும் புலிகளிற்குமிடையே மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் அரசியல் மாற்றங்கள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அச்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதனால் தமது சுய அரசியல் இலாபங்களிற்காக ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்து திரை மறைவில் செயற் படுவதாகவும் கூறப்படுகிறது.

ஐக்கிய தெசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரின் ஊழல்கள் பல தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது.

## தமிழீழத் தேசியத்....

கூட்டுறவாளர்கள்,போராளிகள்,பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் வேலணை புளியங்கூடல் அம்மன் ஆலய முன்றலிலும், நல்லூர் ஆலய முன்றலிலும், வடமராட்சியில் மாலிசந்தி பிள்ளையார் ஆலய முன்றலிலும்,

வன்னிப் பிராந்தியத்தில் கிளிநொச்சி சந்திரன் பூங்காவிலும், மல்லாவியில் வண்ணன் விளையாட்டரங்கிலும், புதுக்குடியிருப்பு நகர் வலயத்தில் மாவீரர் மண்டபத்திலும், வட்டக்கச்சி பிரதேசத்தில் வட்டக்கட்சி மாவீரர் மண்டபத்திலும் , தருமபுரம் வலயத்தில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்திலும், மற்றும் முழங்காவில். விசுவமடு, மாங்குளப் பிரதேசங்களிலும் பிரதேச ரீதியாகவும்

மன்னார், வவுனியா,தென் தமிழீழப் பகுதிகளிலும் நிகழ்வுகள் நடைபெற்றன. பகல் அடையாள உண்ணாவிரதமும் அனுஸ்டிக்கப்பட்டது. இரவு பொதுக்கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(யோ)


# பணிநிலை வெற்றிடம்

"ஈழநாதம்" பத்திரிகைப் பணிமனையில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உள்ளன.

**இயந்திர இயக்குநர் பயிலுநர்:**

க.பொ.த.(சா-த) சித்தி, முன் அனுபவம் மேலதிகமாகக் கணிக்கப்படும்.

**உதவி ஆசிரியர்:**

பல்கலைக்கழகப் பட்டதாரிகள்

**இதர பணிகளுக்கு:**

க.பொ.த. (உ-த) சித்தி (ஆண்கள் தகுந்த ஆவணங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்).

நிர்வாகி: 'ஈழநாதம்', பிரதான வீதி, கிளிநொச்சி.

# வன்னி மண்ணில் கணினி முறையில்

அழகன் ஓவ்செற் பதிப்பகம்



முதன்மைச்சாலை
கிளிநொச்சி.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.